வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.11.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 331 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# எரிசக்தி துறையின் முதலீட்டிற்காக ஈரானுடன் கைகோர்க்கும் இலங்கை!



*கொழும்பு, நவ. 07*

இலங்கையில் எரிசக்தி துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஈரானின் புதிய தூதுவர் அலிரேசா டெல்கோஷிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இரு நாட்டு உறவுகளையும் வலுப்படுத்துவது தொடர்பாக அலரிமாளிகையில் இருவருக்கிடையேயும் இடம்பெற்ற உரையாடலின் போதே இந்த விடயத்தினை

11

# தமிழர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி இலுப்பைக்குளத்தில் புத்தர் சிலைகள்



*திருமலை, நவ. 07*

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று திங்கட்கிழமை காலை இரு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டன.

நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜ மகா விகாரைப்பகுதியில் நேற்றுக் காலை பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இந்த

11

# சீன முதலீட்டாளர்களை தமிழர்கள் ஆதரிப்பார்கள்

## அந்நாட்டு தூதுவர் நம்பிக்கை



**யாழ்ப்பாணம், நவம்பர் 07**

**சீனாவில் இருந்து இலங்கைக்கு கடல் உணவு இறக்குமதி செய்யப்படாது. குறிப்பாக வட மாகா ணத்திற்கு கடல் உணவு இறக்குமதி செய்யப்படாது என இலங்கைக்கான சீன தூதுவர் ஷி ஷென் ஹொங் தெரிவித்தார்.**

**சீன தொழிற்துறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் எனவும் அவர் கூறினார்.**

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இலங்கைக்கான சீன தூதுவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரதை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்தது. சீனா எதிர்காலத்திலும் கை கைகொடுக்கும்.

15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. 5 மில்லியன் உணவு பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5 மில்லியன் வீட்டு

11



## நாவற்குழி விகாரையில் சீனத் தூதுவர்

*யாழ்ப்பாணம், நவ. 07*

சீனாவின் பௌத்த மக்களின் உதவியுடன் இலங்கையின் ஏழை மக்களுக்கு உலருணவு வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நாவற்குழி ஸ்ரீசமித்தி சுமன விகாரையில் இடம்பெற்றது.

நாவற்குழி ஸ்ரீ சமித்தி சுமன விகாரையின் தலைவர் ரத்னஸ்ரீ தேரர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சீனத் தூதுவர் ஷீ ஷென் ஹொங் கலந்துகொண்டு

11

# அமெரிக்கா இலங்கைக்கு எப்போதும் துணை நிற்கும்



*கொழும்பு, நவ. 07*

அபிவிருத்திச் செயற்பாடுகளில் இலங்கைக்கு எப்போதும் துணை நிற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் கல்வி அமைச்சர் பிரேமஜயந்தவிற்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் இலங்கை மாணவர்களின் கல்வி தொடர்பில் கலந்து ரையாடப்பட்டதாக ஜூலி சங் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் (டுவிட்டர்) பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

11

## உள் விவகாரங்களில் சீனா தலையிடாது!

*யாழ்ப்பாணம், நவ. 07*

இலங்கையின் உள் விவகாரங்களில் சீனா தலையிடாது என யாழ். சிவில் சமுகப் பிரதிநிதிகளிடம் கூறினார் சீனத் தூதுவர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனத்தூதுவர் நேற்று மாலை தனியார் விடுதியில் யாழ்.மாவட்டத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் சிவில் சமூக பிரதிநிதிகள்

11



# மட்டக்களப்பில் கைதான 6 மாணவர்கள் விடுதலை

### கண்ணீர்மல்க வரவேற்றனர் போராட்டக்கள தாய்மார்

*மட்டக்களப்பு, நவ. 07*

மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் போராட்டத்தில் பங்கேற்ற பின்னர், வீடு திரும்பிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய் யப்பட்ட நிலையில், ஏறாவூர் சுற்றுலா நீதி மன்றத்தினால் நேற்று பிணையில் செல்ல

11

# இலங்கையின் வளங்கள் பிறநாடுகளுக்கு விற்பனை

## அனுராதா யஹம்பத் குற்றச்சாட்டு

*கொழும்பு, நவ. 07*

இலங்கையின் வளங்கள் அரசியல் காரணங்களுக்காக பிறநாடுகளுக்கு தாரைவார்க்கப்படுவதாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்தால் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டதை போல தற்போது திருகோணமலை துறைமுகமும் வழங்கப்படும் அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே, அனுராதா

11

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசியல் பரப்பில் நேற்றுமுன்தினம் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. வவுனியாவில் தமிழரசு கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெற்ற அதேவேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மத்திய செயற் குழுக்கூட்டம் மன்னாரில் நடைபெற்று முடிந்திருக்கின்றது.

தமிழரசு கட்சியில் நீண்ட காலமாக பேசப்பட்டு வந்த கட்சியின் மாநாட்டை ஜனவரி இருபத்தியோராம் திகதி நடத்துவதென்று கடைசியாக முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

கட்சிக்கு இனி யார் தலைமை தாங்கப்போகின்றார்கள் என்பது நிச்சயமாக அன்றைய தினம் தெரிந்துவிடும். திட்டமிட்டபடி மாநாடு நடைபெற்றால் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஆனால் இதுவரை இரண்டு பேருக்கு இடையில் நடைபெறும் என்ற தலைமைப் பதவிக்கான போட்டி இப்போது வேறுவிதமாக மாறியிருப்பதாக கட்சி உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பந்தன் ஐயா தனது இயலாமை காரணமாக பதவி விலக வேண்டும் என்ற பொருள்பட ஒரு தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் சுமந்திரன் கருத்துத்தெரிவித்திருந்தது அண்மைக்காலமாக பேசு பொருள் ஆகியிருந்தது. இது தொடர்பாக பேசுவதற்காக கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை நேரில் அழைத்து பேசிய சம்பந்தன் ஐயா, கடும் தொனியில் சில கருத்துக்களைத் தெரிவித்ததாகவும், அதனையடுத்து கட்சித் தலைவராக மாவை தொடர்வதையே அவர் விரும்புவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. மாவை மீண்டும் தலைவரானால் தான் சிரேஷ்ட தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வதாக சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருப்பதாகவும், இதனால் போட்டி மாவைக்கும் சுமந்திரனுக்குமாக மாறியிருப்பதாகவும் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சித் தலைவராக மாவை தொடர்வதற்கு சம்பந்தனின் ஆசீர்வாதமும் கிடைத்திருப்பதாகவும் தெரியவந்தது. சுமந்திரன் மாவையுடன் போட்டியிடுவாரா அல்லது கட்சியின் பாரம்பரியம் கருதி மாவையுடன் போட்டியிடுவதை தவிர்த்துக்கொள்வாரா என்பது தெரியவில்லை.

மன்னாரில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மத்திய குழுக்கூட்டத்தில் பல விடயங்கள் பேசப்பட்டபோதிலும் நடந்து முடிந்த அவர்களின் ஹர்த்தால் போராட்டத்திற்கு 'ஈழநாடு' - குறிப்பாக ஊர்க்குருவி எழுதிய கருத்துக்கள் தொடர்பாக பலரும் அதிருப்தியைத் தெரிவித்ததாக தெரியவந்தது.

'ஈழநாடு' மாத்திரமன்றி, வேறும் சில ஊடகங்களும் ஆரம்பம் முதலே தமது ஹர்த்தாலுக்கு எதிராக கருத்துக்களைப் பரப்பி வந்ததாக இரண்டு தலைவர்கள் கடும் கண்டனங்களை பதிவு செய்ததாகவும், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக இது போன்ற போராட்டங்களை நடத்துவதை ஏன் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்றும் அவர்கள் ஆராய்ந்ததாக தெரியவந்தது.

முல்லைத்தீவு நீதிபதி தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகக் கூறிவிட்டு பதவியை ராஜினாமாச் செய்துகொண்டு காணாமல் போன நாளிலிருந்து, தமிழர் தேசமெங்கும் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. அவை எல்லாவற்றுக்கும் ஊடகங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தது வாசகர்கள் அறிந் ததுதான். அதிகம் ஏன், ஏழு தமிழ் கட்சிகள் கூட்டாக மனித சங்கிலிப்போராட்டம் நடத்துவதென்று அறிவித்ததும் அதனை ஊடகங்கள் தலைப்புச் செய்தியாக்கியிருந்தன.

ஆனால் அது குறிப்பிட்ட அளவு மக்கள் ஆதரவைப் பெறாததைத் தொடர்ந்து - அதாவது மக்களை வரச் சொன்னால் வரமாட்டார்கள், ஆனால் வீடுகளில் இருங்கள் என்றால் இருப்பார்கள் என்ற எண்ணத்துடன் ஹர்த்தால் அறிவிக்கப்பட்டதும், அதுகும் கல்விச் செயல்பாடுகள் பற்றியோ, சாதாரணர்களின் வயிற்றுப்பாடு பற்றியோ எதுவித கரிசனையும் இல்லாமல் போராட்டம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

நீதிபதி ஒருவரே அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு போகின்ற நிலை வருகின்றபோது தமிழ் மக்களின் அரசியல் தலைமையை வைத்திருக்கின்ற தாங்கள் அதுபோன்ற போராட்டங்கள் நடத்தாமல், வேறு என்ன செய்ய வேண்டும் என்று இந்த விமர்சகர்கள் நினைக்கிறார்கள் என்று ஒரு தலைவர் கொஞ்சம் கடும் தொனியில் கருத்து தெரிவித்ததாகவும் தெரியவந்தது.

ஆனால் இந்த ஊர்க்குருவி, அது தொடர்பாக எழுதியபோது, நிச்சயமாக நமது எதிர்ப்பைப் பதிவுசெய்யத்தான் வேண்டும் அதற்காக மக்களை துன்புறுத்துவதை விடுத்து, தலைவர்கள் தங்களைத் தாங்களே துன்புறுத்தி, ஆகக்குறைந்தது ஒரு பன்னிரண்டு மணி நேரங்கள் ஒரு இடத்தில் அடையாள உண்ணாவிரதத்தை நடத்தலாம் என்றும் அவ்வாறு தலைவர்கள் இருந்தால் அவர்கள் பின்னால் அணிதிரள விரும்பும் எங்களைப் போன்ற தொண்டர்களும் வந்து கலந்துகொள்வார்கள் என்றுதான் இந்த ஊர்க்குருவி எழுதியிருந்ததே தவிர, போராட்டமே வேண்டாம் என்று எங்கும் எழுதவில்லை.

ஊர்க்குருவியின் அந்த கருத்தைப் படித்துவிட்டு ஐந்து கட்சிக் கூட்டணியின் தலைவர் ஒருவர், அன்றைய ஹர்த்தால் தினத்தன்று தலைவர்கள் எல்லோரும் உண்ணாவிரதம் இருப்போம் என்று அழைப்பு விடுத்தபோது அதனை எவரும் கண்டுகொள்ளவில்லை என்பதும் இங்கே ஞாபகப்படுத்த வேண்டியது.

எது எப்படியிருந்தாலும், அந்த ஹர்த்தால் போராட்டம் தொடர்பாகவும் சில சிலமணிநேரங்களை யாவது ஒதுக்கி கட்சித் தலைவர்கள் விவாதித்திருப்பது நல்லது தான்.!

-ஊர்க்குருவி.

# மட்டு. மேய்ச்சல் தரைப் பகுதியில் புதிய பொலிஸ் சோதனைச்சாவடி!



மட்டக்களப்பு, நவ. 07

மட்டக்களப்பு மயிலத்த மடு மாதவனை மேய்ச்சல்தரைப் பகுதியில் அமைக்கப்பட்ட பொலிஸ் சோதனைச் சாவடியை மட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிர்மன்ன திறந்து வைத்தார்.

குறித்த மேச்சல்தரைப் பகுதியில் பொலிஸ் காவல் அரண் ஒன்று அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் பண்ணையாளர்கள் கோரிக்கைக்கு அமைய சோதனைச் சாவடி அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பொலிஸ் சோதனைச் சாவடியை கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக புதிய சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு அதனை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சென்று பார்வையிட்டு பொலிஸாரை கடமைக்கு அமர்த்தி கடமைகளை ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கில் 499 அதிபர்களுக்கு நியமனம்



திருமலை, நவ. 07

கிழக்கு மாகாணத்தில் அதிபர் தரம் மூன்றை நிறைவு செய்த 499 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல, அதாவுல்லா, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க உட்பட பலர் கலந்துக் கொண்டதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஜனக ரத்நாயக்கவிடம் கப்பம் கேட்ட மேலும் இரண்டு பேர் கைதாயுள்ளனர்

கொழும்பு, நவ. 07

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க விடம் 15 இலட்சம் ரூபா கப்பம் பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை பகுதியில் வைத்து கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதான சந்தேகநபரை தமது வீட்டில் மறைத்து வைத்து இந்தக் குற்றத்திற்கு உதவியதாக கைதான சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கைதானவர்கள் தம்புள்ளை - பெல்வெஹெற பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 40 வயதுடையவர்களென தெரியவந்துள்ளது. (அ)

# மின் கட்டணத்தை உடன் குறைக்குக!

## ராதாகிருஷ்ணன் வலியுறுத்து



கொழும்பு, நவ. 07

மின் கட்டண உயர்வுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ராதாகிருஷ்ணன், அது உடன் குறைக்கப்பட வேண் டும் எனவும் வலியுத்தினார்.

மலையக மக்கள் முன் னணியின் மக்கள் சந்திப்பு அக்கரப்பத்தனை ஸ்ரீலக்ஷ்மி மஹால் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே இராதாகிருஷ்ணன் இவ்வாறு வலியுறுத்தினார்.

அத்துடன், மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், நாட்டின் தற்போதைய நிலைமை, அரசாங்கத்தால் மக்கள் சந்திக்கும் இன்னல்கள், விலைவாசி உயர்வு, தோட்ட நிர்வாகத்தின் அராஜகங்கள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலும் இதன்போது கருத்துகளை முன்வைக்கப்பட்டன.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் விஜய சந்திரன், பிரதி தலைவர் ராஜா ராம், மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன், நிதிச்செயலாளர் தாளமுத்து சுதாகரன் உட்பட கட்சி முக்கியஸ்தர்களும், மக்கள் சந்திப்பில் பங்கேற்றனர். (அ)

**யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

Eelanadu
07.11.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# நில அபகரிப்புக்கு எதிராக போராடுதல்

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நல்லிணக்கம் – என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டே – மறுபுறம் பல்வேறு வழிகளிலும் நில ஆக்கிரமிப்பை கண்டும் காணாமல் விடுவதன் ஊடாக, ஆக்கிரமிப்பிற்கு அரசாங்கங்கள் பல்வேறு வழிகளில் உதவியிருக்கின்றன. கடந்த பதின் நான்கு வருடங்களில் – விகாரை நிர்மாணம், தொல்பொருள் இடங்கள், உல்லாசப்பயண அபிவிருத்தி – என பல வழிகளிலும் நில ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், இவைகள் எவையுமே ஆக்கிரமிப்பு என்னும் வடிவத்தில் நிகழவில்லை. இந்த இடத்தைத்தான் தமிழர் தரப்புக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். வரலாற்றுரீதியாக பௌத்த விகாரைகள் இருந்த இடங்கள் என்னும் பெயரிலேயே, அனைத்து விடயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

ராஜபக்ஷ குடும்ப அதிகாரம் இந்த விடயங்களுக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்கியது. எவர் வேண்டுமனாலும் காணிகளை அபகரிக்கலாம் என்னும் வகையில் கதவை அகலத்திறந்துவிட்டது. இந்தக் காலத்தில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக திருகோணமலையில் உல்லாசப்பயண மேம்பாடு என்னும் பெயரில் நிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் அதிகமானவர்கள் ராஜபக்ஷக்களோடு தொடர்புபட்டவர்கள்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து இந்த நிலைமைகளில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்தவாறு விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பிற்கான வரைபு, உபக்குழுக்கள் – என்றெல்லாம் தங்களுக்குள் முட்டிக் கொண்டிருந்த போது, மறுபுறம் தனது தந்தையாரான ரணசிங்க பிரேமதாசவின் 94ஆவது, பிறந்த தினத்தில் புதிய விகாரைக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார் சஜித் பிரேமதாச. அத்தோடு பிரேமதாசவின் நினைவாக, 1,125 விகாரைகள் கட்டப்படு மென்றும் சூளுரைத்தார். அதன் ஆரம்பமாக 25 மாவட்டங்களிலும், மாவட்டங்களுக்கு ஒரு விகாரை என்னுமடிப்படையில் அடிக்கல்கள் நட்டப்பட்டன. அந்த விகாரைகளுக்கான கட்டுமாணங்களே தற்போது இடம்பெற்றுவருகின்றன. தையிட்டி விகாரையும் மைத்திரி – ரணில் ஆட்சிக்காலத்தின் அடிக்கல் நடப்பட்ட ஒன்றுதான்.

நிலைமை இவ்வாறிருக்க நில ஆக்கிரமிப்பு என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டிருப்பதால் மட்டும், நில ஆக்கிரமிப்பை தடுத்துநிறுத்திவிடமுடியாது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் அனைவருமே, பௌத்தத்தை ஓர் அரசியல் கருவியாக பயன்படுத்துபவர்கள்தான். இதனை தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்வது? காணி அதிகாரம் தமிழர்களிடம் இருந்தால் மட்டும்தான் இந்த விடயத்தை, தென்னிலங்கையின் விருப்பத்திற்கு அமைவாக முன்னெடுப்பதை தடுக்கமுடியும். இதனைத் தவிர வேறு வழியில்லை – ஏனெனில், சர்வதேச அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று, ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கல் நடவடிக்கை – ஒரு மத மேலாதிக்க நடவடிக்கை என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கூறியிருக்கின்றது. அமெரிக்க மத விகாரங்களுக்கான குழுவின் இந்த ஆண்டுக்கான, அறிக்கையிலும், தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை முன்னிறுத்தி செயல்படுகின்றது என்னும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான சர்வதேச அவதானங்களுக்கு மத்தியில்தான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் அனைத்து கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். இதற்கு முதலில், வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் அனைத்து கட்சி மாநாடு ஒன்றை கூட்ட வேண்டும். விடயங்களை அனைவருமாக, ஜனநாயக வழியில் எவ்வாறு எதிர்கொள்வது, அதற்காக உடனடி – இடைக்கால – நீண்டகால அடிப்படையில் எவ்வாறு இயங்குவது – என்னுமடிப்படையில் சிந்திக்க வேண்டும். இதற்கென அனைத்து கட்சிகள் குழுவொன்றை நியமிக்க வேண்டும். இலங்கைக்குள் சட்டரீதியில் கையாளக் கூடிய விடயங்களை கையாளும் அதேவேளை, தொடர்ச்சியான அரசியல் அழுத்தங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்னுமடிப்படையிலும் சிந்திக்க வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



*“பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்.”*

**- பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)**

# அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன அதிகாரி இலங்கைக்கு!

கொழும்பு, நவ. 07

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறவுள்ள அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய உட்கட்டமைப்பு முதலீட்டுக்கான ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்காகவே அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

தெற்காசிய பிராந்தியத்திற்காக பிரஜைகள் அபிவிருத்தி வர்த்தக நிதியத்திற்கான அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு உறுதிப்பாட்டிற்கான ஒப்பந்த கைச்சாத்திலும் ஸ்கொட் நேதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நாட்டுக்கு வருகைத் தரவுள்ள ஸ்கொட் நேதன், நாட்டின் உயர்மட்ட வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் தலைவர்களையும் சந்திக்கும் அதே வேளை, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியில் வணிகங்களை மேற்கொள்ள எவ்வாறு துணை புரிகிறது என்பதை அவதானிப்பதற்காக அதன் வாடிக்கையாளர்களின் வசதிகளையும் அவர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தல் இல்லையேல் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள்!

## அனுரகுமார எச்சரிக்கை



கொழும்பு, நவ. 07

அடுத்த வருடம் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் , அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தாவிட்டால் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் இடம்பெற்ற புலம்பெயர்ந்த இலங்கையர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைத்துள்ளதாகவும், மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை மக்களால் நியமிக்கப்படும் ஜனாதிபதியே பிரயோகிக்க வேண்டுமென அரசியலமைப்பில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபையின் நிர்வாகத்தை ஆணையாளரின் கீழும் மாகாண சபைகளை ஆளுநர் நிர்வாகத்தின் கீழும் கொண்டு வர முடியும்.எனினும் மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை மக்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதியே பிரயோகிக்க வேண்டும்.


எனவே ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அடுத்த வருடம் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை தவிர்க்க முற்பட்டால், அவர் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னதாகவே செல்ல வேண்டும்.

மக்கள் இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் ஏன் வீதிக்கு வருவதில்லை என சிலர் கேட்கின்றனர். மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை, தேர்தல் நடத்தப்படாது என்ற சமிக்ஞை கிடைத்தால், மக்கள் வீதியில் இறங்குவார்கள்.

அதிகாரத்தைப் பெற்ற பின்னர் நாட்டை மாற்றியமைப்பதற்கான அனைத்து சக்திகளையும் தேசிய மக்கள் சக்தி உள்ளடக்கியது- என்றார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 07 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 21**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : தசமி**




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால்ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**சிம்மம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டியநாள்.

**கன்னி**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும்.

**துலாம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களை எல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**விருச்சிகம்**
உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சகஊழி யர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமாக தீர்ப்பு வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

# இலங்கை மலையகத் தமிழர் விழாவில் முதல்வர் ஸ்டாலின் காணொலிக்கு தடை

## மத்திய அரசுக்கு வைகோ கண்டனம்

**சென்னை, நவ. 07**

**இலங்கை மலையகத் தமிழர் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து மத்திய அரசுக்கு, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

**அந்த அறிக்கையில்-**

தென் தமிழகத்தில் இருந்த அப்பாவி மக்களை வலு கட்டாயமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தியது பிரிட்டிஷ் அரசு. அவர்கள் இலங்கை மலையகத் தமிழர்கள் என்ற பெயரில் அடையாளப்படுத் தப்பட்டார்கள். பிரிட்டிஷாரால் வலுக்கட்டாயமாக கொண்டு போகப்பட்டு இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த 200 ஆவது ஆண்டு தற்போது அனுசரிக்கப்படுகிறது. “நாம் 200 ஒற்றுமை பன்முகத் தன்மை மற்றும் பாரம்பரியத்தின் முழக்கம்” என்ற பெயரில் மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடந்தது. இந்நிகழ்ச்சியை இலங்கை மலையகத் தமிழர்களுக்காக இலங்கையின் உள்நாட்டு தோட்ட தொழில் துறை மற்றும் அரசு தொழில்துறை அமைச்சகம் முன்னெடுத்தது.

இலங்கையில் உள்ள மலையக தமிழர்களின் உறவு பாலமாக இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்த, இந்த நிகழ்ச்சியில் மலையக தமிழர்கள் அவர்களின் பூர்வீக தமிழ் பூமி சார்ந்த அரசியல் பிரதிநிதிகளாக தமிழ்நாட்டிலிருந்தும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட இந்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். இலங்கை அரசின் பங்களிப்புடன் இலங்கை



அமைச்சர் ஜீவன் தொண்டமானால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டும் என இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனை ஏற்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக மலைகத் தமிழர்களின் நாம் 200 விழாவிற்கு வாழ்த்துரை வழங்கி அனுப்பியிருந்தார்.

முதல்வரின் உரை ஊடகங்கள் மற்றும் ஏடுகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் நவம்பர் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மேற்கண்ட விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் காணொலி உரையை ஒளிபரப்பக்கூடாது என்று மத்திய பாஜக அரசு தடை போட்டு விட்டது என இந்து ஆங்கில நாளேடு விரிவாக செய்தி வெளியிட்டு இருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் இந்திய அரசின் சார்பில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார். தமிழ்நாடு பாஜக தலைவரும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அனுப்பிய காணொலி உரையை அந்த விழாவில் ஒளிபரப்ப தடை விதித்ததன் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலினை சிறுமைப்படுத்துவதற்கு முயன்றுள்ள மத்திய பாஜக அரசின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது கடும் கண்டனத்துக்குரியது-எனத் தெரிவித்துள்ளார். (அ)

# தமிழகத்தில் நவ.8 வரை கனமழை

சென்னை, நவ. 07

தமிழகத்தில் எதிர்வரும் 8ஆம் தேதி வரை கனமழை நீடிக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னை மாநகரை விட, புறநகர் பகுதிகளில் கன மழை கொட்டித் தீர்த்து வருகிறது. நேற்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் மிதமான மழையும், சில இடங்களில் கனமழையும் பெய்துள்ளது. வரும் நாட்களிலும் கனமழை தொடர வாய்ப்பு உள்ளது. (அ)

# முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு டெங்கு:

சென்னை, நவ. 07

அதிமுக முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால், டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் டெங்குவால் பாதிக்கப்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன்னும் 2 மாதங்களுக்கு டெங்குவின் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ள சுகாதாரத்துறை தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர் பி.தங்கமணிக்கு காய்ச்சல், இருமல் பிரச்னை இருந்து வந்ததால், நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னை ஆயிரம் விளக்கு பகுதி கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு மருத்துவ பரிசோதனை செய்ததில், அவருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது உறுதியானது. இதையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (அ)

# அமெரிக்க குடியுரிமை துறக்கின்றாரா பஸில்?

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக

கொழும்பு, நவ. 07

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்காக அமெரிக்க குடியுரிமையை துறக்குமாறு பொதுஜன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவிடம் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரியவருகின்றது.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷவை களமிறக்கவேண்டும் என்பதே மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணமாக இருந்தபோதிலும் 'வியத்மக' அமைப்பினர் உள்ளிட்ட தரப்புகளின் கோரிக்கையின் பிரகாரமே கோட்டாபய ராஜபக்சவை களமிறக்க வேண்டி ஏற்பட்டது எனவும் அந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஜனாதிபதி வேட்பாளரை பெயரிட்டுள்ள நிலையில், தமது கட்சி வேட்பாளரை இன்னும் அறிவிக்காமல் இருப்பது கட்சிக்கு அரசியல் ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் மொட்டு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனவேதான் பஸில் ராஜபக்ஷவை பெயரை அறிவிக்க வேண்டும் எனவும், தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் இரட்டைக் குடியுரிமையை துறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்றெழுத்து உறுப்பினரே தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என மொட்டு கட்சி அண்மைக் காலமாக அறிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சக்கோட்டை முனைக்கு சென்றார் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், நவ. 07

இலங்கைக்கான சீன தூதுவர் நேற்று பருத்தித்துறை சக்கோட்டை முனைக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்று முற்பகல் 11:30 மணியளவில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி ஊடாக வருகை தந்த தூதுவர், சக்கோட்டை முனைக்கு இரண்டாவது தடவையாக வருகை தந்து பார்வையிட்டுச் சென்றார்.

சீனத் தூதுவர் வட மாகாணத்திற்கான 150 மில்லியன் உதவித் திட்டத்தை பார்வையிடவே வருகை தந்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில் சக்கோட்டை முனைக்கு தனிப்பட்ட விடயமாக வந்து சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# யாழ். விடுதியில் உயிரிழந்த நபர்



யாழ்ப்பாணம், நவ. 07

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் கொட்டடிப் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் ஆணொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

லால் பெரேரா (வயது-61) என்ற தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மொழி பேசுபவரே உயிரிழந்துள்ளார்.

மூன்று நாட்களாக குறித்த விடுதியில் தங்கி இருந்த நிலையில் அறைக்கு வெளியே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

விடுதி உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மக்கள் காங்கிரஸில் இருந்து அலிசப்ரி ரஹீம் எம்.பி நீக்கம்

## விசாரணையின் பின் உயர்பீடம் முடிவு



கொழும்பு, நவ. 07

அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னரே, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதியான அலிசப்ரி ரஹீம் சட்டவிரோதமாக தங்கத்தைக் கடத்திய சம்பவம், கட்சிக்கும் சமூகத்துக்கும் அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும் மற்றும் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, இவரின் உறுப்புரிமையை நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பில், விசாரணை நடத்திய ஒழுக்காற்றுக் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் உடன்படிக்கையின் பிரகாரம், தராசுச் சின்னத்தில் அலிசப்ரி ரஹீம் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிணங்க, இவரது பதவி விலக்கல் குறித்த கடிதம் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவுக்கும், அலிசப்ரி ரஹீமுக்கும் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது."

கடிதத்தைப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா, இது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# தனியாக பெண்கள் வசித்த வீட்டில் கத்திமுனையில் புகுந்து கொள்ளை!

## புதுக்குடியிருப்பு பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 07

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் மூன்று பெண்கள் மாத்திரம் வசித்து வந்த வீட்டில் கடந்த சனிக்கிழமை கொள்ளையர் குழு ஒன்று புகுந்து பல பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் தனது கணவனை இழந்துவிட்ட நிலையில் தனது மகளை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சிறீபாலன் ஜுலிட் கிறிஸ்ரா என்பவர் வளர்த்து வருவதோடு தனது தாயாரையும் பராமரித்து வருகின்றார்.

இவ்வாறான பிண்ணனியில் மூன்று பெண்கள் மாத்திரம் வசித்துவரும் குறித்த வீட்டின் கூரையை பிரித்து வீட்டினுள் நுழைந்த மூன்று சந்தேக நபர்கள் குறித்த வீட்டில் இருந்த தாய், மகள், தாயின் தாய் ஆகிய மூவரின் கண்கள், கைகளை கட்டிவிட்டு இவர் சேமித்த வைத்த 90000 ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

அத்தோடு மகளின் கழுத்தில் கத்தியை வைத்து மகளை கொலை செய்யப்போவதாக மிரட்டி அவர்களிடம் இருந்த சுமார் ஆறு பவுணுக்கு மேற்பட்ட நகைகளையும் கொள்ளையடித்து அவர்களின் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் வீட்டில் நுழைந்த குறித்த திருடர்கள் நேற்று முன் தினம் அதிகாலை 3 மணிக்கு பின்னரே வீட்டை விட்டுச் சென்றதாகவும் இவர்களை துன்புறுத்தியதாகவும் குறித்த தாய் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.



முன்னைய காலத்தில் நாம் எந்த பயமும் இன்றி வாழ்ந்தோம். ஆனால் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எம்மை பொலிஸ் நிலையத்திற்கோ ஊடகங்களுக்கோ தகவல் வழங்கக்கூடாது எனவும் அதை மீறி கூறினால் மூவரையும் வந்து கொலை செய்வோம் எனவும் அவர்கள் மிரட்டி சென்றுள்ளனர் என தாய் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# இலங்கை வர அனுமதி கோரும் மற்றுமொரு சீன ஆய்வு கப்பல்!

கொழும்பு, நவ. 07

**மற்றுமொரு சீன ஆய்வு கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிகோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**2024 ஆம் ஆண்டு முதல் பகுதியில் குறித்த கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.**

இருப்பினும் குறித்த கப்பலுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த சீன ஆய்வு கப்பல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், இதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள சீன தூதரகம் எந்தவொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவினால் தொடர்ந்தும் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வரும் நிலையில், சீன மீண்டும் அனுமதி கோரியுள்ளது.

இந்த நிலையில், சீனாவின் கோரிக்கை குறித்து தமக்கு தெரியாது என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கபில பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 14 மாதங்களில் இரண்டு ஆய்வு கப்பல்களை சீனா இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இதன்படி, கொழும்பு துறைமுகத்தில் அண்மையில் நங்கூரமிட்ட 'ஷி யான் 6' எனும் சீன ஆய்வு கப்பல் இலங்கை கடற்பரப்பில் இரண்டு நாள் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சி முகவர் நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடல் நீரின் உப்புத்தன்மை மற்றும் வெப்பநிலை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் முதலாவது சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது இந்திய பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்த இந்தியாவின் கவலையை மேலும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இவ்வருடத்தில் 14 முறையாக செயலிழந்த வவுனியா வைத்தியசாலையின் மின்தூக்கி



வவுனியா, நவ. 07

இவ்வருடத்தில் 14 ஆவது முறையாக செயலிழந்த வவுனியா பொது வைத்தியசாலையின் மின்தூக்கியில் நேற்று முன்தினம் வைத்தியர்கள் உட்பட 11 பேர் சிக்கிக்கொண்டனர்.

இவர்களை காப்பாற்ற வவுனியா பொது வைத்தியசாலை ஊழியர்கள் சுமார் நாற்பது நிமிடங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்ததாக செய்திகள் வெளியாகின.

குறித்த மின்தூக்கி அடிக்கடி பழுதடைகின்ற நிலையில் இது போன்ற சந்தர்ப்பங்களில் வைத்தியசாலை ஊழியர்கள் ஆபத்தான நோயாளிகளை சக்கர நாற்காலிகளில் ஏற்றிச் செல்லவேண்டியுள்ளதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இதன்போது அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் வவுனியா பொது வைத்தியசாலைக்கு வந்து உதவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, நவ. 07

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகளுக்கு எதிராக வலுப் பெற்றுள்ள போராட்டங்கள் காரணமாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வளாகத்தை சுற்றி இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நேற்று காலை இந்தப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய குழு, கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகளிடம் மனுவொன்றையும் கையளித்தது.

இலங்கை அணி அண்மைக்காலமாக பங்குபற்றிய போட்டிகளில் படுதோல்விகளை சந்தித்து வருகிறது. இந்தியாவுடன் நடைபெற்ற போட்டியில் 55 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை அணியால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இந்த தோல்வியால் கிரிக்கெட் ரசிகர்கள் அணி மீது கடும் அதிருப்தியை அடைந்துள்ளனர். அத்துடன், அணியின் முன்னாள் வீரர்களும் தேர்வாளர்கள் உட்பட கட்டுப்பாட்டுச் சபைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் சபைச் செயலாளர் மொஹான் டி சில்வா தமது பதவியை இராஜினாமா செய்திருந்தார். அத்துடன், சில அதிகாரிகளும் பதவி விலகியிருந்தனர்.

அதன் பிரகாரம் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுண ரணதுங்க தலைமையில் இடைகால நிர்வாக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக எட்டு மாவட்டங்களில் பாதிப்பு

கொழும்பு, நவ. 07

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 08 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை சுமார் ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதுடன், மரணமொன்றும் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் கலென்பிதுனுவெவ பிரதேசத்தில் இந்த மரணம் பதிவாகியுள்ளது.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த 35 வயதுடைய ஒருவரே மின்னல் தாக்கம் காரணமாக இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மண்சரிவு மற்றும் கற்பாறை சரிவுகள் காரணமாக கொழும்பு - பதுளை பிரதான வீதியின் ஹல்துமுல்ல - பத்கொட பகுதியில் ஒரு வழி போக்குவரத்து இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவொன்று குறித்த பகுதிக்கு சென்று முன்னெடுத்த பரிசோதனையின் பின்னர், அந்த பகுதியில் ஒரு வழி போக்குவரத்தை முன்னெடுக்க அனுமதி வழங்கியதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதய குமார தெரிவித்தார்.

இதேவேளை, அத்தனகலு ஓயாவின் துனமல பகுதியில் சிறு வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், அந்த ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நில்வளா கங்கையின் நீர்மட்டம் தலகஹகொட, பனடுகம பிரதேசங்களில் அதிகரித்துள்ளதால் குறித்த பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மொரகட்டிய பிரதேசத்தில் வலவை கங்கை பெருக்கெடுத்துள்ளதால் சிறு வெள்ள பெருக்கு நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

## கட்டணம் செலுத்த முடியாத 7 இலட்சத்துக்கும் அதிகளவான பாவனையாளர்களின் இணைப்பை துண்டித்த மின்சாரசபை

கொழும்பு, நவ. 07

மின் கட்டணம் செலுத்த முடியாத 788,235 பாவனையாளர்களுக்கான மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் மின்கட்டண அதிகரிப்பு, வரி அதிகரிப்பு, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி உள்ளிட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக மின்கட்டணம் செலுத்துவது தற்போது சவாலான விடயமாக காணப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த ஆண்டு, அரசாங்கம் மூன்று முறை மின் கட்டணத்தை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதத்தில் அதிகளவான மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த எண்ணிக்கை 120,474 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் 118,481 பாவனையாளர்களின் மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த ஒக்ரோபர் மாதம் 106,106 பாவனையாளர்களின் மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (அ)

# அத்தியாவசிய பொருட்கள் விலைகள் குறைக்கப்படும்

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 07

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளை குறைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார். (அ)

# விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்தால் வருடாந்தம் ரூ. 20 பில்லியன் வரை இழப்பு!

கொழும்பு, நவ. 07

வன விலங்குகளால் ஏற்படுத்தப்படும் பயிர்ச் சேதங்களால் நாட்டுக்கு வருடாந்தம் 17 முதல் 20 பில்லியன் ரூபாவரை இழப்பு ஏற்படுவதாக கணக்கெடுப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வன விலங்குகளால் வருடாந்தம் 31 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறிகள் மற்றும் பழங்கள் இழக்கப்படுவதாகவும், வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களைத் தடுப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து உத்திகளும் தோல்வியடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

2022ஆம் ஆண்டு குரங்குகளால் உண்ணப்பட்டு அழிக்கப்பட்ட தேங்காய்களின் அளவு 200 மில்லியனைத் தாண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைக்குச் சென்ற 15 வயது மாணவி மாயம்!

## மாங்குளம் பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, நவ. 07

முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருந்து பாடசாலைக்கு சென்ற 15 வயதுடைய மாணவி ஒருவர் காணாமல் போயுள்ளார் என அவரது தாயா ரால் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் கடந்த முதலாம் திகதி பாடசாலைக்கு சென்ற சமயம் காணாமல் போய் இருப்பதாக அவரது தாயாரால் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை குறித்த சிறுமி தொடர்பான தகவல்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் இருந்து குறித்த பிரதேசத்திற்கு வேலைக்காக வந்து தங்கியிருந்த ஒருவரே மேற்படி சிறுமியை கடத்திச் சென்றுள்ளதாக சந்தேகிப்பதாகவும்,

அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# விவசாயிகளுக்கு உரங்கள் கொள்வனவுக்கு நிதி வைப்பு

கொழும்பு, நவ. 07

விவசாயிகளுக்கு பெரும் போக பருவ நெற்செய்கைக்கான உரங்களை கொள்வனவு செய்ய அவசியமான அரசாங்கம் வழங்கிய பணத்தின் முதற்கட்டமாக 100 கோடி ரூபா மாவட்ட செயலகங்களின் கணக்குகளில் நேற்று வரவு வைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து விவசாயிகளுக்கும் ஹெக்டேயருக்கு 15,000 ரூபாய் என்ற வகையில் நிதியை மானியமாக அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப் பெரும் போக பருவத்தில் எட்டு இலட்சம் ஹெக்டேயர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், நெற்செய்கை மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளுக்கும் இந்த நிதி மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக 1200 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மன்னாரில் சிக்கியது ஐஸ்!

மன்னார், நவ. 07

மன்னாரில் நீண்ட காலமாக போதைபபொருள் விற்பனையில் ஈடுபட்ட நபர் மற்றும் அவரிடம் இருந்து போதைப் பொருளை கொள்வனவு செய்த நபர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து ஐஸ் வகை போதைப் பொருளும் நேற்றுக் காலை கைப்பற்றப் பட்டது.



மன்னார், புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி,தாராபுரம் உட்பட்ட பல பகுதியில் நீண்ட காலமாக போதை பொருள் விற்பனையாளராகவும் விற்பனை முகவராகவும் செயற்பட்ட குறித்த நபர் மன்னார் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொடர்பில் நேற்று மன்னார் குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரி விபுர்த்திக்கு கிடைத்த இரகசிய தகவலில் பிரகாரம் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத்தின் ஆலோசனையின் பெயரில் குற்றப்புலனாய்வு பிரிவு சார்ஜன்ட ரத்னமலல தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் போதை பொருளை கொள்வனவு செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 31, மற்றும் 20 வயதுடைய நபர்கள் என்பதுடன் புதுகுடியிருப்பு பாடசாலைக்கு அருகில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 21 கிராம் 9 மில்லி கிராம் ஐஸ் ரக போதை பொருள் மற்றும் 50000 ரூபா ரொக்கப்பணம் மற்று 2 கைபேசிகளும் மீட்கப்பட்டன.

அதே நேரம் பிரதான சந்தேக நபருக்கு 1 கிலோ ஐஸ் போதைப்பொருள் விற்பனைக்காக வந்த நிலையில் 21 கிராம் போதை பொருளே தற்போது கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மிகுதி போதை பொருட்களை தேடும் நடவடிக்கையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் மாவட்ட சூழல் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகள்!

மன்னார், நவ. 07

மன்னார் மாவட்டத்தின் சூழலைப் பாதுகாப் பதில் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.



பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப கல்வி மாணவர்கள், உயர் கல்லூரி மாணவர்கள் என இளைய சமூகத்தின் பங்களிப்பினை மேம்படுத்தும் நோக்குடன் கரித்தாஸ் வாழ்வு தயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் நேற்று குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

உயிலங்குளம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவி களின் பங்களிப்புடன் குறித்த விழிப்புணர்வு நிகழ்வும், மரம் நடுகையும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வானது வாழ்வு தய சூழல் பாதுகாப்புப் பிரிவின் இணைப்பாளர் யேசுதாசன் அவர்களின் ஒழுங்கமைப்பில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் மோகன் குரூஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வாழ்வு தயத்தின் இயக்குநர் அருட்பணி அருள் ராஜ் குரூஸ் அடிகளார் கலந்து கொண்டதுடன் மிசறியோ நிறுவனத்தின் நிதியின் ஊடாக அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் நோக்கத்தினையும், இளையோராக நமது சூழலை பாதுகாப்பதில் உள்ள நடைமுறை சாத்தியங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

சூழலுக்கு மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள், அழிவுகள் அந்த அழிவுகளை கட்டுப்படுத்துவதற்காக உள்ள சட்டங்களின் பயன்பாடுகள் பற்றி திட்ட இணைப்பாளரினால் விளக்கமளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உணவு ஒவ்வாமை காரணமாக 30 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, நவ. 07

மீகொட பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலையொன்றில் நேற்று வழங்கப்பட்ட பகலுணவு ஒவ்வாமை காரணமாக 30 ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மெகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 17 பேர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையிலும் 13 பேர் பாதுக்க மாவட்ட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு மயக்கம், தலைவலி மற்றும் வாய் தொற்று ஏற்பட்டுள்ளது.

மதிய உணவில் இருந்த மீன் துண்டினால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபாய் நிதி!

கொழும்பு, நவ. 07

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் காரணமாக புதிய தவணைக்காக இந்த வருடம், மார்ச் மாதம் பாடசாலைகளை கால தாமதமாகவே ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

ஆனால் அந்தத் தாமதங்களைக் குறைத்து 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புதிய தவணை ஆரம்பிக்கப் படும்.

அதன்படி, அடுத்த வருடத்தில் இருந்து, தரம் ஒன்று முதல் தரம் 11 வரையிலான பாடத்திட்டத்தை அதே வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டு கல்வியாண்டை வழமை போன்று நடத்த முடியும்.



மேலும், நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்பட்டாலும் கூட அவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நேர அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும்.

அதேபோன்று, 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நடத்தி முடிக்கப்பட்ட சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

80 வீத பாடசாலை சீருடைகள் இலவசமாக எமக்கு கிடைக்கவுள்ளன.

2030ஆம் ஆண்டுக்குள் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்குவதே எமது இலக்காகும்.

உலக உணவு வேலைத்திட்டம், USAID மற்றும் தனியார் துறையினரும் இதற்காக வழங்கும் ஆதரவை தொடர்ந்து பெறுக்கொள்வதற்கான பல்வேறு திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இந்த வேலைத் திட்டத்திற்காக ஒரு நிதியத்தை ஆரம்பிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (அ)

# நிரந்தரத் தீர்வே எமக்கு வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. கூறுகிறார்

மட்டக்களப்பு, நவ. 07

**“தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வே வேண்டும். இந்த இலக்கிலேயே தமிழரசுக்கட்சி பயணிக்கின்ற நிலையில் இதற்கான புதிய வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பிக்க வேண்டும்”**

**இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட, இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கூறினார்.**

மட்டக்களப்பில் நடைபெற்ற மூத்த ஊடகவியலாளரும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவருமான இரா.துரை ரெத்தினத்தின் “கிழக்கில் சிவந்த சுவடுகள்” நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான செல்லையா பேரின்பராசா தலைமையில், மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவில், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்ஸன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டதுடன், நூலின் அறிமுக உரையை முன்னாள் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.சுகுமாரும், நூல் நயவுரையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கி.துரைராஜசிங்கமும் நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன், நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேலும் தெரிவிக்கையில்-

பலர் பேசவும், எடுத்துக்காட்டவும் மறுக்கும் பல விடயங்களைத் தாங்கியதாகவும், காலத்தின் கட்டாய ஆவணமாகவும் வெளிவந்துள்ள கிழக்கில் சிவந்த சுவடுகள் நூலை வெளியிட்டுள்ள மூத்த ஊடகவியலாளர் இரா.துரைரெத்தினத்தின் முயற்சி அளப்பரியதாகும்.



தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைப் பலரும் பேசுவார்கள் ஆனால் பொறுப்புக்கூறல் விடயத்தில் தெற்கில் முரண்பட்ட நிலைகாணப்படினும் இதற்கு இந்த நூல் மூலம் ஊடகர் துரைரெத்தினம் பதில் தந்துள்ளார்.

சமகால அரசியலில் தமிழரசுக் கட்சி அரசியல் ரீதியாகப் பலதீர்வுகளுக்கான முயற்சிகளை முன்னெடுத்து வரும் நிலையில், அரசியல் தீர்வும், பெறுப்புக்கூறலும் முக்கிய விடயங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நோக்கிய செயற்பாடுகளைத் தமிழரசுக்கட்சி முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கிய பாதையில் தமிழரசுக் கட்சி பயணித்து வரும் நிலையில் நமது மக்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடாவடித்தனம்புரியும் அம்பிட்டிய தேரரின் செயற்பாடுகள் தொடர்பில் மௌனம் காப்போர், காணொளிகளைப் பதிவு செய்யும் ஜனநாயக உரிமை பெற்ற ஊடகவியலாளர்களை விசாரணைக்கு அழைக்கும் நிலைமையே உள்ளது.

ஊடகங்களை அடக்க முயற்சிக்கும் இத்தகைய செயற்பாடுகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. கண்டிக்கத்தக்க செயற்பாடுகளே இவையாகும்.

மக்களைக்காட்டிக் கொடுப்பவர்களுக்கு எத்தகைய விசாரணைகளும் இல்லாத நிலமையே இங்குள்ளது.

மயிலத்தமடு பண்ணையாளர்களின் போராட்டம் எந்ததீர்வுமின்றி 50 நாட்களையும் தாண்டி தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் நாங்கள் மட்டும் தான் தட்டிக்கேட்கும் நிலையும் உள்ளது.

இந்த நிலையில் காகம் ஒரு வடையைத்திருடிச் சென்றாலும், சாணக்கியன்தான் திருடிச் சென்றார் எனப்பறைசாற்றும் நிலமை இந்த மாவட்ட இன வெறியர்களால் ஏற்படுத்தப்படுகின்றது- என்றார்.

நூலாசிரியர் துரைரெத்தினம் நிகழ்வின் போது, மட்டக்களப்பு ஊடகமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன சார்பாக பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார். (அ-06)



# புதிய அரசியல் கலாசாரத்தை நாட்டில் உருவாக்கவேண்டும்

## சம்மாந்துறையில் சம்பிக்க ரணவக்க

அம்பாறை, நவ. 07

பரம்பரையாக செய்யும் அரசியலை மாற்ற வேண்டும். தந்தைக்கு பின் மகன், தாய்க்கு பின் மகள் என்ற அரசியல் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். திறமைக்கு முதலிடம் அளிக்கும் அரசியல் சூழலை உருவாக்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணிக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன் தினம் சம்மாந்துறையில் ‘கட்டியெழுப்புவோம்’ எனும் தலைமைப்பில் பொது மக்களை சந்திக்கும் நிகழ்வு ஒன்றில் அவர் கலந்துகொண்டார்.

இதன் போது அங்கு வருகை தந்தவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாட்டை இக்கட்டான நிலையிலிருந்து மீட்பதற்கு சரியான தலைமை வேண்டும். கடந்த வருடம் எங்களுக்கு பெற்றோல், உரம், மின்சாரம், கேஸ் என்று எதுமே இருக்கவில்லை. இதற்கு பிரதான காரணம் எங்களிடம் டொலர் இல்லையென்று கூறப்பட்டது.

வங்கியில் நாங்கள் ஒரு கடனைப் பெற வேண்டுமென்றால் அதற்கான ஆவணங்களை வழங்க வேண்டும். வங்கியில் பெற்ற கடன் மூலமாக வியாபாரத்தை சரியாக செய்யாது விட்டால் கடனை மீளச் செலுத்துவது கடினமாக இருக்கும். அப்போது வங்கி நம்மை வங்குரோத்து அடைந்தவர் என்று கண்டு கொள்ளும்.

இந்நிலையில் கடனுக்காக எமது சொத்தை வங்கியில் வைத்திருந்தால் அதனை வங்கி எடுத்துக் கொள்ளும்.

இது போலவே கடந்த காலங்களில் வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்று வீதிகள், விமான நிலையங்கள் போன்றவற்றை அமைத்தோம். அவற்றால் எமக்கு எந்த இலாபமுமில்லை. அதனால் கடனை அடைக்க முடியாது போனது. நாடு வங்குரோத்தடைந்தது.

எங்களுக்கு கடனாக டொலர்களை தந்தவர்கள் வழங்கு தொடர்ந்துள்ளார்கள். இந்நிலையில் உலக வங்கி கடன்களை தந்தவர்களிடம் நீங்கள் அவசரப்பட வேண்டாம், கடனை தருவதற்குரிய ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம்.

அதனால் வழக்குத் தொடர வேண்டாமென்று வேண்டியுள்ளது.

இப்போது அரசாங்கம் மின்சாரத்தின் விலையையும், பால் மாவின் விலையையும், கேஸ், எரிபொருட்ளின் விலையையும், ஏனைய பொருட்களின் விலைகளையும் அதிகரித்துள்ளது. இதைத்தான் அரசாங்கம் செய்கின்றதே ஒழியே உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை.

ஒரு சில தொழில்களை வழங்கினாலும், கடந்த 03 வருடங்களாக இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கவில்லை. தொழில் வழங்கினால் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் பணம் கிடையாது.

வைத்தியர்கள், பொறியிலாளர்கள், கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எங்களினால் சிறந்த சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயினும், இங்கு வந்து வாக்குறுதிகளை தருவார்கள். அவற்றை நிறைவேற்றும் பணம் யாரிடமும் கிடையாது. இதிலிருந்து மீள வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் படித்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 2025 முதல் 2028 ஆண்டு வரையான காலப் பகுதியில் இந்த நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வரலாமென்ற திட்டத்தை முன் வைத்துள்ளோம்.

இதற்கு முதல் எங்கள் கடனை அடைக்கும் பணம் இக்காலப் பகுதியில் எம்மிடமில்லை. அதனால் 2028 இலக்காகக் கொண்டு செயற்படுகிறோம். இந்த குறுகிய 03 வருட காலத்தில் எங்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய வழியை ஏற்படுத்த வேண்டியுள்ளது-என்றார். (அ)

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் ம.விக்கு கணினி

அம்பாறை, நவ. 07

கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு கணினி இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

பாடசாலையின் கணிணி தேவை கருதி, பஹ்றியன்ஸ் 2002 நலன்புரி அமைப்பிக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து,கல்முனை பஹ்றியன்ஸ் 2002 நலன்புரி அமைப்பினரினால் பாடசாலையில் நேற்று இடம்பெற்ற காலை ஆராதனையில் வைத்து அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் அவர்களிடம் அமைப்பின் சார்பாக எஸ்.என்.ஹஸ்மி,எஸ்.எல்.நாசிக்,ஏ.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கணினி இயந்திரம் ஒன்றினை கையளித்தனர்.

இக் கணினித் தொகுதியைக் கையளித்த பஹ்றியன்ஸ் 2002 நலன்புரி அமைப்பினர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் நன்றியினை தெரிவித்தார். (அ)



# காசாவை இனி ஆள்வது யார்?

## கலந்துரையாடல்களை ஆரம்பித்தது அமெரிக்கா

ரமல்லா, நவ. 07

**காசா பகுதியில் இஸ்ரேலின் "இனப்படுகொலையை" பாலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கண்டித்துள்ளார்.**

**"சர்வதேச சட்டத்தின் கொள்கைகளைப் பொருட்படுத்தாமல், இஸ்ரேலின் போர் இயந்திரத்தால் காசாவில் எங்கள் பாலஸ்தீன மக்கள் அனுபவித்த இனப்படுகொலை மற்றும் அழிவை விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை" என்று அப்பாஸ் ரமல்லாவில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் அன்ரனி பிளின்கனிடம் கூறினார்.**



அன்ரனி பிளிங்கன் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கு ஒரு முன்னறிவிப்பின்றி விஜயம் செய்து, ஹமாஸுடனான இஸ்ரேலின் போரில் சுழலும் பதற்றங்களுக்கு மத்தியில் அப்பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பலஸ்தீனிய அதிகார சபைத் தலைவரைச் சந்தித்தார்.

பலஸ்தீனிய ஹமாஸ் போராளிகள் தெற்கு இஸ்ரேல் மீது ஒக்ரோபர் 7 அன்று திடீர் தாக்குதல் நடத்தி 1,400 பேரைக் கொன்று 240 இற்கும் மேற்பட்டவர்களைக் பணயக்கைதிகளாக கைப்பற்றிய பின்னர், இப்பகுதிக்கு தனது இரண்டாவது வருகையின்போது, பிளிங்கனும் மஹ்மூத் அப்பாஸும், நடைமுறை பலஸ்தீன தலைநகரான ரமல்லாவில் மேற்குக் கரையில் சந்தித்தனர்.

"உடனடியான போர்நிறுத்தம்" இருக்க வேண்டும் என்றும் மனிதாபிமான உதவிகள் காசா பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அப்பாஸ் பிளிங்கனிடம் கூறினார் என்று அப்பாஸின் செய்தித் தொடர்பாளர் மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

காசாவில் உள்ள பலஸ்தீனியர்கள் "பலவந்தமாக இடம்பெயரக் கூடாது" என்று பிளிங்கன் அப்பாஸிடம் கூறினார்.

மேற்குக் கரையில் பலஸ்தீனியர்களுக்கு எதிரான தீவிரவாத வன்முறையை நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இருவரும் விவாதித்ததாக வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மத்யூ மில்லர் தெரிவித்தார்.

வெளியுறவுத்துறை செயலாளர் பிளிங்கன் சனிக்கிழமையன்று அரபு அதிகாரிகளின் போர்நிறுத்தத்திற்கான அழைப்புகளை நிராகரித்தார். .

மோதல்கள் பிராந்தியத்தில் பரவாமல் இருப்பதை உறுதி செய்வதுடன், இஸ்ரேலின் நோக்கம் என்று கூறும் ஹமாஸை முழுமையாக அழித்த பிறகு காசாவை எவ்வாறு ஆளலாம் என்பது பற்றிய விவாதங்களை பிளிங்கன் தொடங்க முயற்சிக்கிறார்.

"பயனுள்ள மற்றும் புத்துயிர் பெற்ற பலஸ்தீனிய அதிகாரம்" இறுதியில் காசாவை இயக்குவதற்கு மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று பரிந்துரைத்துள்ளார், ஆனால் மற்ற நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் இடைக்கால பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தில் பங்கு வகிக்கக்கூடும் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

(அ)



# இஸ்ரேலியப் பிரதமர் பதவி விலகவேண்டும்

## போராட்டத்தில் குதித்த இஸ்ரேலிய மக்கள்

டெல் அவிவ், நவ. 07

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு உடன் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியானதற்கும், 200 இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளால் பிடித்துச்செல்லப்பட்டதற்கும் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலக வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மத்திய ஜெருசலம் பகுதியில் உள்ள பிரதமரின் உத்தியோகப் பூர்வ இல்லத்துக்கு முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் பணயக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 3 ஆயிரத்து 900 குழந்தைகள் உட்பட 9 ஆயிரத்து 488 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை காஸா முனையில், 2,500 இற்கும் மேற்பட்ட பயங்கரவாத இலக்குகள் தாக்கி அழிக்கப்பட்டு உள்ளன என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்து உள்ளது.

காஸாவில் அல்-ஃபகூரா என்ற பள்ளி மீது இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதில் 15 பேர் உயிரிழந்ததாகவும், 54 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

காஸா மீதான தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால், போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது. வடக்கு காஸா வில் உள்ள பாலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பலமுறை எச்சரிக்கை விடுத்த போதிலும், ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறவில்லை.

"போர் நிறுத்தம் என்பது ஹமாஸிடம் இஸ்ரேல் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போரிடும்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஓடுபாதையில் குழந்தையுடன் காரைச் செலுத்தி வந்து விமானத்தில் ஏற முயற்சித்த நபரால் பெரும் பரபரப்பு!

## துப்பாக்கி வேட்டுத் தீர்ப்பு! போத்தல் எறிகுண்டு வீச்சு
## ஹம்பேர்க் வான் தளத்தில் பெரும் களேபர நிலைமை




பேர்ளின், நவ. 07

நான்கு வயதுக் குழந்தையுடன் தனது காரை விமான நிலையத் தடைகளைத் தாண்டி ஓடுபாதையில் செலுத்திவந்து விமானம் ஒன்றை நெருங்க முற்பட்ட நபர் ஒருவரை ஜேர்மனியப் பொலீஸார் தடுத்து வைத்திருக்கின்றனர்.

ஜேர்மனியின் ஹம்பேர்க் ஹெல்முட் ஷ்மிட் விமான நிலையத்தில் சனிக்கிழமை மாலை நேரம் இந்தக் களேபரம் இடம்பெற்றிருக்கிறது.

நான்கு வயதுப் பெண் குழந்தையைக் காருக்குள் பணயமாக வைத்துக்கொண்டு துருக்கி நாட்டுக்குப் புறப்படவிருந்த விமானத்தில் ஏறிச் செல்வதே அந்த நபரது நோக்கமாக இருந்துள்ளது. அவர் அந்தக் குழந்தையின் தந்தை என்று கூறப்படுகிறது. குழந்தை தந்தையால் கடத்தப்பட்ட தகவலைத் தாயார் முன்கூட்டியே பொலீஸாருக்கு முறையிட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

விமான நிலையத் தடைகளை இடித்துத் தள்ளிக் கொண்டு காரைச் செலுத்திய அந்த நபர், பொலீஸார் நெருங்காமல் இருப்பதற்காகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார். பெற்றோல் குண்டுகளையும் ஓடு பாதையில் வீசிஎறிந்துள்ளார். அதனால் ஓடு பாதையில் தீ பரவியது. அங்கு நூற்றுக்கணக்கான பயணிகளுடன் புறப்படத் தயாராக நின்ற துருக்கி ஏயார் லைன்ஸ் விமானம் ஒன்றுக்கு மிக நெருக்கமாகக் காரைச் செலுத்திச் செல்ல முற்பட்டார். பொலீஸ் கொமாண்டோக்கள் ஓடு பாதைக்கு விரைந்து சென்று நிலையெடுத்துக் கொண்டனர். ஒரு பெரும் தாக்குதல் நிலைவரம் போன்று கள நிலை மாறியதால் விமான நிலையத்தில் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டது. விமானங்கள் தரையிறங்குவதும் புறப்பட்டுச் செல்வதும் உடனடியாக நிறுத்தப்பட்டது.

துருக்கி புறப்படவிருந்த விமானத்தில் இருந்து பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டனர். அதேசமயம் விமான நிலையத்தில் பயணம் செய்யக் காத்திருந்த சுமார் மூவாயிரத்து 200 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களில் பலர் பஸ்கள் மூலம் அருகே உள்ள ஹொட்டேல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பொலீஸார் அந்த நபருடன் நீண்ட நேரம் பேரம் பேச முயன்றனர். தன்னையும் மகளையும் விமானத்தில் துருக்கிக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுப் பொலீஸ் அதிகாரிகளுடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று கூறப்படுகிறது. துப்பாக்கியுடன் காணப்பட்ட அந்த நபருடன் நள்ளிரவு வரை சமரச முயற்சியில் ஈடுபட்ட பொலீஸார் இன்று காலை வரை அதனைத் தொடர்ந்தனர்.

இந்தச் சம்பவத்தால் ஹம்பேர்க் விமான நிலையத்துடனான வான் சேவைகள் அனைத்தும் நேற்று முன் தினம் இரவு முழுவதும் தடைப்பட்டிருந்தன.

(அ)

ஈழநாடு



# எந்த கட்சிக்கும் ஆதரவு இல்லை

## கூறுகின்றார் சந்திரிகா



கொழும்பு, நவ. 07

**எந்த கட்சிக்கும் ஆதரவளிப்பது குறித்து தீர்மானிக்க வில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநா யக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

**மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக சுதந்திரக் கட்சிக்குள் விசேட பதவியொன்றை கோரியுள்ளதாக வெளி யாகியுள்ள தகவல்களை அவர் நிராகரித்துள்ளார்.**

சுதந்திரக்கட்சியில் இணைந்து அதற்கு ஆதரவளிப்பதற்கு முன் னாள் ஜனாதிபதி தீர்மானித்துள் ளார். அதன் மூலம் அவர் அரசி யலில் மீண்டும் ஈடுபடத் தீர்மா னித்துள்ளார் என கடந்த வாரம் ஊடகங்களில் செய்திகள் வெளி யாகியிருந்தன.

அனுர பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்திருந்த வறிய குடும்பங்க ளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ் வில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா-

எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்க தீர்மானிக்கவில்லை.

ஊடகங்கள் நான் சுதந்திரக் கட்சியில் விசேட பதவியை கோரியுள்ளதாக தெரிவித்துள் ளன. இது முற்றிலும் தவறான விடயம்.

சுதந்திரக்கட்சியின் தலை வரே என்னிடம் வந்து எனது ஆதரவுக்கு மன்றாடினார். எனி னும் நான் எந்த கட்சிக்கும் ஆத ரவளிக்க தீர்மானிக்கவில்லை- என்றார்.

இதேவேளை, சுதந்திரக்கட் சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் பல கட்சிகளுடனும் கலந்துரை யாடல்களில் ஈடுபட்டுள்ளதாக கட்சியின் பதில் பொதுச்செய லாளர் பாராளுமன்ற உறுப்பி னர் சரதி துஸ்மந்த தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியே தற்போது கட்சியின் ஸ்தாபகர் என தெரிவித்த அவர், கட்சியின் யாப்பை மாற்றி புதிய பதவிகளை அறிமுகப்படுத்தும் அளவிற்கு பேச்சுவார்த்தைகள் இல்லை. ஆனால் அவர் எங்களுக்கு மிகப் பெரிய பலம். ஆகவே அவரின் ஆதரவை நாங்கள் பெறவேண் டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை எனவும் கூறினார். (அ)

# அச்சுறுத்தல்களுக்கு பணிந்து நிவாரணம் கொடுக்கமுடியாது

## கூறுகிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



கொழும்பு, நவ. 07

ஒவ்வொரு குழுக்களின் அச் சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புக ளுக்கு ஏற்ப நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாது என விவசாய மற்றும் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இத னைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நாங்களும் கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்கு பவர்கள் தான். மக்களைச் சந் திக்கிற விதத்தில் மக்களின் கஷ் டம் எங்களுக்கும் தெரியும்.

வங்குரோத்து அடைந்த நாட்டிலே நாங்கள் இருக்கின் றோம். இந்தநிலை தற்போது மாற்றமடைந்துக் கொண்டிருக் கின்றது.

ஆனாலும் மக்களின் வாழ்க்கை செலவு குறித்த விட யத்தில் இன்னும் நல்லவொரு நிலைப்பாட்டிற்கு செல்லமுடி யவில்லை.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் எதிர்கா லத்தில் வலுவான அடித்தளம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று நம்புகின்றோம்.

நாங்கள் நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதாயின் ஒரு துறையை மாத்திரம் அல்ல ஒட்டுமொத்த நாட்டு மக்களை யும் குறித்து சிந்திக்கவேண்டும்.

தொழிற்சங்கங்கள் இல்லாத எத்தனையோ தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். ஆகவே வழங் கும் நிவாரணங்களை பொது வாக பெற்றுக்கொடுக்கவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு குழுக்களின் அச் சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புக ளுக்கு ஏற்ப நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாது- என்றார். (அ)

# யாழ். பழைய கச்சேரிக் கட்டடத்தை நேற்று பார்வையிட்டார் சீன தூதுவர்



யாழ்ப்பாணம், நவ. 07

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்ட சீனத் தூதுவர் ஷி ஷென் ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ். பழைய கச்சேரி கட்டடத்தைப் பார்வை யிட்டனர்.

யாழ்ப்பாணம் பழைய கச் சேரி கட்டடத்தை சீன நிறுவ னமொன்றுக்கு விற்பனை செய் வதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்படுவதாக கடந்த காலங்க ளில் குற்றச்சாட்டு எழுந்த நிலை யில், சீனதூதுவர் குழுவினர் குறித்த பகுதிக்கு விஜயம் மேற் கொண்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியது. (அ)

# ஜனாதிபதி ரணிலுடன் மொட்டுக்கு முரண்பாடு

## இராதாகிருஸ்ணன் கூறுகிறார்



கொழும்பு, நவ. 07

மொட்டுக்கட்சியும் ஜனாதி பதியுடன் மோதலில் உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருப்ப தாக பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் தெரி வித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

மக்களின் ஆதரவு இல்லா மல் வந்த ஒரு ஜனாதிபதியால் இவ்வளவு செய்ய முடியும் என் றால் மக்களின் ஆதரவோடு ஜனாதிபதி ஒருவர் வந்தால் எவ்வளவோ செய்யலாம்.

இலஞ்சம் வழங்கி மாகாண சபை தேர்தலை பிற்போட்டார் கள் இந்த தேர்தலையும் இலஞ் சம் வழங்கி பிற்போட முயற்சிக் கின்றார்கள். ஆகவே மக்கள் இது குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அடுத்த அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான நடவ டிக்கையை மக்கள் முன்னெடுக் கவேண்டும்.

தற்போது மொட்டு கட்சி யும் ஜனாதிபதியுடன் மோத லில் உள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்திருக்கின் றது.

ஆகவே இது எதிர்காலத்தில் எவ்வாறு முடிவடையும் என்று கூற முடியாது-என்றார். (அ)

# யாழ்ப்பாணத்தில் வீதியில் மணலை கொட்டிச் சென்ற கடத்தல்காரர்கள்!



யாழ்ப்பாணம், நவ. 07

டிப்பரில் மணலை கடத்திய வர்கள் பொலிஸாரைக் கண்டு தப்பியோடிய போது வீதியில் மணலைக் கொட்டி விட்டுச் சென்ற சம்பவம் யாழ்ப்பாணத் தில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியது.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில், சிறுப்பிட்டி பகுதியி லேயே நேற்று அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் மணல் கடத் தல் காரர்களின் செயலால் வீதி யோரமாக இருந்த தொலைத் தொடர்பு கம்பங்கள் சேதமடைந் துள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வீதியில் கொட்டப்பட்ட மணலை வீதிக்கு அருகில் வசிக்கும் சில வீட்டார் தமது வீடுகளுக்கு எடுத்து சென்றதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இது குறித்த மேலதிக விசார ணைகளைப் பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (அ)

# தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சியையே மக்கள் விரும்புகின்றனர்

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 07

தேசிய மக்கள் சக்தி தலை மையிலான ஆட்சியையே 46 வீதமான மக்கள் விரும்புவதாக மக்கள் விடுதலை முன்னணி யின் முன்னையின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரி வித்தார்.

மஹர பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே விஜித ஹேரத் இவ்வாறு கூறினார்.

அண்மையில் மேற்கொள் ளப்பட்ட கணக்கெடுப்பில் 46 வீதமான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு விருப்பம் தெரிவித்துள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

கணக்கெடுப்பின்படி தற்போ தைய அரசாங்கத்திற்கு 17 வீத மான மக்களின் அங்கீகாரமும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு 29 வீதமும், பொதுஜன பெரமுனவுக்கு 8 வீதமும் கிடைத்துள்ளதாக அவர் கூறினார். (அ)

## நாவற்குழி....

நாவற்குழியில் உள்ள தேவைப்பாடுடைய சிங்கள மற்றும் தமிழ் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினார்.

மேற்படி உதவித்திட்டம் சீனாவின் பௌத்த சங்கம், இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கம் ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழர்களின்....

இரண்டு புத்தர் சிலைகளும் வைக்கப்பட்டன.

அந்தப் பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஒகஸ்ட் மாதம் ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் 09.09.2023 அன்று குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு நேற்று காலை குறித்த பகுதியில் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச் சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (அ)

## மட்டக்களப்பு....

அனுமதிக்கப்பட்டனர். சந்திவெளிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் அறுவரும் நேற்று முன்தினம் மாலை, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். சட்ட விரோதமாக ஒன்று கூடியமை,பெருந்தெருக்கள் சட்டத்தின் கீழ் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் மாணவர்கள் மீது பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. வழக்கை ஆராய்ந்த நீதிபதி மாணவர்களை ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

பிணையெடுப்பவர்கள் தமது வதிவிடத்தை கிராமசேவகர் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும் என கோரப்பட்ட நிலையில், வதிவிடத்தை உறுதிப்படுத்த நேற்றுமுன்தினம் எழுந்த தாமதம் காரணமாக மாணவர்கள் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து நேற்று அழைத்து வரப்பட்ட மாணவர்கள், ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, பிணையாளிகளின் விதிட உறுதிப்படுத்தல் கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். பிணையில் விடுவிக்கப்பட்ட மாணவர்கள், சித்தாண்டியில் கால்நடைப் பண்ணையாளர்கள் 53ஆவது நாளாக போராடி வரும் இடத்திற்கு சென்றனர். போராட்டக்களத்தில் இருந்த தாய்மார், மாணவர்களை கண்ணீர் மல்க வரவேற்று, உணவு உபசரிப்புக்களையும் வழங்கினர் மாணவர்கள் மீது சந்தி வெளிப் பொலிஸாரால் தொடுக்கப்பட்ட வழக்கானதுஎதிர்வரும் 17ஆம் திகதிவ ரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# சம்பந்தனை ஊழல் பேர்வழியாக காட்ட முனைந்தால் அது தவறு!

## சுமந்திரனை சாடும் சுரேஷ் பிரேமச்சந்திரன்

திருமலை, நவ. 07

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை, ஓர் ஊழல் பேர்வழியாக சுமந்திரன் காட்ட முனைந்தால், அது பிழை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் மோசடிகள் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்வொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையில், இரா.சம்பந்தனை ஊழல் பேர்வழியாக சித்தரித்துள்ளார்.

இரா.சம்பந்தன் நீண்ட காலமாக பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்காமல், சம்பளம் மற்றும் சலுகைகளை பெறுவதாகவும், இது ஊழல் இல்லையா? எனவும் சுமந்திரன் வினவியுள்ளார்.

என்னை பொறுத்த வரையில் பாராளுமன்றத்தில் எல்லோருக்கும் வழங்கக்கூடிய சலுகைகள்,சம்பளம் போன்றவை தான் சம்பந்தனுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பயணங்கள் மற்றும் சுகயீனங்கள் காரணமாக அனைவராலும் பாராளுமன்றத்திற்கு முறையாக சமூகமளிக்க முடிவதில்லை.

இதனால் அவர்கள் யாரும் சம்பளம் மற்றும் சலுகைகளை பெற்றுக்கொள்ளாமல் இல்லை.

சம்பந்தனுடன் எங்களுக்கு ஆயிரம் முரண்பாடுகள் உள்ளது எனினும், அவர் ஒரு போதும் சும்மா இருக்கவில்லை என்றே நாம் கூறுவோம்.

அவர் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் பல்வேறு வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்திக்கின்றார்.

திருகோணமலை மாவட்டத்தின் பிரச்னைகள் குறித்து அரசுக்கு கடிதம் எழுதுவதோடு, ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபடுகின்றார்.

அப்படியான ஒருவரை எதுவும் செய்யாதது போல் ஒரு தோரணையை சுமந்திரன் காட்ட முனைவதும், ஊழல்



எதுவுமே செய்யாது ஊழல் செய்கிறார் என கூறுவதும் தவறானது.

இலங்கையின் ஊழல்கள் குறித்து பேசும் நிகழ்வு ஒன்றில் இவ்வாறான கருத்தை சுமந்திரன் முன்வைத்துள்ளமையானது ஏற்றுக்கொள்ள முசம்பந்தன் தனது முதுமை காரணமாக பதவி விலக விரும்பினால் அவர் விலக முடியும். அது அவருடைய முடிவு.

உள் வீட்டு விவகாரமாக இருந்தாலும் கூட நாங்கள் வெளியில் இருந்து பார்க்கின்ற போது இவ்வாறான நடவடிக்கைகள் தவறாகவே காணப்படும் - என்றார்.

## இலங்கையின்....

யஹம்பத் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வெளிநாடுகளிடமிருந்து பாரிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் அவற்றுள் அதிகளவானவை திருகோணமலையை இலக்காக கொண்டுள்ளதாகவும் அனுராதா யஹம்பத் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலையின் பெறுமதியை இலங்கையர்கள் அறிந்திராவிட்டாலும் அதனை வெளிநாடுகள் நன்கு அறிந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய துறைமுகங்களில் இரண்டாவது இடத்தை திருகோணமலை துறைகம் பிடித்துள்ளதை நினைவூட்டிய அனுராதா யஹம்பத், அதில் தற்போது இந்தியா முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான ஒப்பந்தங்கள் சிறிலங்கா அரசாங்கத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திருகோணமலை துறைமுகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள அமெரிக்கா, அவுஸ்ரேலியா மற்றும் ஜப்பானுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு முதலீடுகள் தேவை என்பதை தாம் ஏற்றுக் கொண்டாலும் அதற்கான வாய்ப்புக்கள் விரிவாக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு திருகோணமலை துறைமுகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு சிறிலங்கா அரசாங்கம் சீனாவுக்கு வழங்கியிருந்தததாகவும் தற்போதைய அதிபரும் அப்போதைய பிரதமருமான ரணில் விக்ரமசிங்கவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் நினைவூட்டியுள்ளார்.

இந்த துறைமுகத்தில் தற்போது பல வணிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அதிலிருந்து இலங்கைக்கு எந்தவொரு பலனும் கிடைப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு பாரிய வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்டாலும், ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து அது சீனாவுக்கு வழங்கப்பட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அம்பந்தோட்டையிலுள்ள பெறுமதி மிக்க சொத்தை இலங்கை இழந்ததுபோல தற்போது திருகோணமலை துறைமுகத்தையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அனுராதா யஹம்பத் மேலும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீன....

திட்டத்திற்கும் வழங்கவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா சென்றபோது, இலங்கை கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது.

சீனா உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடு. மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கிறோம்.

சீன தொழிற்துறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என்று நம்புகிறேன்-என்றார். (அ)

## உள் விவகார...

சார்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சமூக பொருளாதார ஆய்வாளர் செல்வின், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மற்றும் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அதில் கலந்துகொண்ட சீனத் தூதுவர் இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

அதையடுத்து சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் தமிழ் மக்களின் இனப் பிரச்னைத் தீர்வு தொடர்பில் சீனத் தூதருக்கு எடுத்து கூறினர். இலங்கைக்கு அழுத்தம் தெரிவிக்கவேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த சீனத் தூதுவர், வெளிநாட்டின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது எனத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி விடயங்களில் உதவிகள் செய்யத்தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இனப்பிரச்னைக்கு தீர்வு வேண்டும் என தூதுவருக்கு புத்திஜீவிகள் எடுத்துரைத்துள்ளனர். (அ)

## எரிசக்தி....

பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் பிரதானி கே சொஹைல் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

பழங்காலத்திலிருந்தே இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு மற்றும் நெருக்கமான சமூக கலாச்சார உறவுகள் பின்பற்றப்பட்டு வருவதாக ஈரானின் தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் தான் பதவி வகிக்கும் காலப் பகுதியில் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு பாடுபடுவேன் எனவும் உறுதியளித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், எரிசக்தி துறை, விவசாயம் மற்றும் தொழில் துறை போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஈரானுக்கு தற்போது உள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதாரப் பிரச்னைகளில் இருந்து விரைவாக மீள்வதற்கும், அபிவிருத்திப் பணிகளுக்காக இலங்கைக்கு வழங்கிய ஆதரவு மற்றும் உதவிகளுக்காகவும் ஈரானுக்கு அவர் நன்றி தெரிவித்திருந்தார். (அ)

## அமெரிக்கா....

“பேராதனை மற்றும் சிகாகோவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்திற்கு இடையில் நடைபெறவிருக்கும் ஆசிரியர் பரிமாற்றம் உட்பட கல்வி ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடினோம்”.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கு ஊட்டச்சத்து, மதிய உணவுகள், கல்விய றிவை ஊக்குவித்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான ஆங்கில கல்வி அறிவு மற்றும் மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களை வளர்த்தல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அமெரிக்கா செயற்படவுள்ளதாக ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது போன்ற செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில் அமெரிக்கா இலங்கைக்கு துணை நிற்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

ஈழநாடு Eelanadu ඊළනාඩු

# தேர்தலுக்கு தயாராகும் ஐக்கிய மக்கள் சக்தி!

## விசேட குழு அமைக்க திட்டம்

கொழும்பு, நவம்பர் 07

**தேர்தல் நடவடிக்கைகளுக்காக விசேட குழுவொன்றை அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.**

**தேர்தலுக்கான கூட்டணி, இட ஒதுக்கீடுகள் உள்ளிட்ட விவகாரங்களை இந்த குழுவே கையாளும் எனவும், இதர கட்சிகளுடன் பேச்சு நடத்தும் எனவும் தெரியவருகின்றது.**

2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடமாக கருதப்படுகின்றது. அரசமைப்பின் பிரகாரம் 2024 ஒக்ரோபர் மாதத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். 2025 வரை பாராளுமன்றத்தின் பதவி காலம் இருந்தாலும், அதனை முன்கூட்டியே கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

இதற்கிடையில் பட்ஜெட் நிறைவேறிய பின்னர் பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேர்தலை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சி தயாராகிவருகின்றது.

அதேவேளை அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் மாவட்ட மட்டத்திலான கூட்டங்களை நடத்திவருகின்றது.

(அ)

# சுகாதார செயலாளரிடம் சி.ஐ.டி வாக்குமூலம் பதிவு

கொழும்பு, நவ. 07

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க ஸ்ரீசந்திர குப்தவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவுக்கு தரமற்ற இம்யூனோகுளோபுலின் வழங்கிய குற்றச்சாட்டின் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டதுடன், நவம்பர் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.57 வயதான சந்தேக நபர் ரத்தொலுகம பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

(அ)

# 11ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்களில் 5 நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டவை!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 07

நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்துள்ளன.

நுண்கடன் நிறுவனங்களை கண்காணிப்பதற்கு நுண்கடன் நிதி நிறுவன அதிகார சபை ஸ்தாபிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மஹரக பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுண்கடன் நிதி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன. நுண்கடன்களை முன்னிலைப்படுத்திய தற்கொலைகள், முரண்பாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் சமூக கட்டமைப்பில் காணப்படுகின்றன.

நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்ய பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தான் முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தும் சட்டமூலம் எதிர்வரும் மாதமளவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

பதிவு செய்யாத நிறுவனங்கள் 05 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் 5 வருடகால சிறைத்தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

நுண்கடன் நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும். இதனை தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியினால் நேரடியாக கண்காணிக்கப்படும் - என்றார்.

(அ)

# யாழ்.நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணம் 2024 இல் நிறைவடையும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 07

புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்.நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் நிறைவடையும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வாகனத் தரிப்பிடம், நவீன அலுவலகங்கள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இது அமைக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 600 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இது முழுக்க முழுக்க திறைசேரியில் இருந்து நிதியளிக்கப்பட்ட திட்டமாகும். மொத்த மதிப்பிடப்பட்ட தொகை 2350 மில்லியன் ரூபா ஆகும். யாழ்ப்பாண நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் 2022 நவம்பரில் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கோவிட் -19 பரவல் மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக, இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமானது.

எனினும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் யாழ். நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதற்கு தேவையான பணத்தை பெற்றுத்தர அமைச்சர் திறைசேரி அதிகாரிகளுடன் பல தடவை கலந்துரையாடினார்.

யாழ். நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்வதோடு, யாழ்ப்பாண மக்கள் மற்றும் அதிகாரிகளின் கடமைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் உரிய தகைமை குறித்து ஆராயுமாறும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(அ)

# விளையாட்டு அமைச்சரின் வர்த்தமானியை ஆராய்வதற்காக குழு அமைத்த ஜனாதிபதி

கொழும்பு, நவ. ஓ7

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அதற்கான வர்த்தமானி தொடர்பில் ஆராய அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்கு நேற்ற பிற்பகல் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சரினால் இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி அறிந்திருக்கவில்லை எனவும், புதிய இடைக்கால குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பில் ஜனாதிபதி அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் மூலம் ஜனாதிபதி இதனை அறிந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை தொடர்பு கொண்டு விசாரிக்க ஜனாதிபதி பல தடவைகள் முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், புதிய இடைக்கால கிரிக்கெட் குழு தொடர்பில் நேற்று பிற்பகல் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கை கிரிக்கெட்டின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான வர்த்தமானி தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவில் அமைச்சர்களான திரன் அலஸ், மனுஷ நாணயக்கார மற்றும் கஞ்சன விஜேசேகர ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

மாலை 6.30 மணியளவில் நிறைவடைந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஆளும் கட்சியின் குழுக் கூட்டம் ஆரம்பமானதுடன், இது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# அரிசியில் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைய நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் பணிப்புரை

கொழும்பு, நவ. 07

இலங்கையை அரிசியில் தன்னிறைவு அடையும் வகையில் அடுத்த ஆறு பயிர் காலங்களில் நாட்டில் நெற்செய்கையை இரட்டிப்பாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நெற்செய்கைகளிலும் ஒரே மாதிரியான அறுவடையை பெற முடியவில்லை. இந்த நாட்டில் நெலின் சராசரி விளைச்சல் ஹெக்டேயருக்கு 2.5 முதல் 4.5 மெற்றிக் தொன் நெல் வரை மாறுபடும். மேலும், தென் கிழக்கு ஆசியாவிலேயே ஒரு ஹெக்டேயருக்கு அதிக நெல் விளைச்சல் என சில மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் 11 மெற்றிக் தொன்கள் வரை பதிவு செய்துள்ளனர்.இலங்கையின் நெல் செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதுடன், அரிசியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை அரிசிக்கான சர்வதேச தேவையை உயர்வாக பேணுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.எனவே விவசாயிகளுக்கு நெல் விளைச்சலை அதிகரிக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் அதேவேளை விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஒதுக்கீடுகளை அரசாங்கம் வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் நெல் வயல்களின் எண்ணிக்கை 800,000 ஹெக்டேயர்களாகும். இரண்டு பருவங்களில் பயிரிடப்படும் நெல் அளவு ஆண்டுக்கு 1.3 மில்லியன் ஹெக்டேயர். நெல்லின் மொத்த விளைச்சல் சுமார் 5.2 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு 3.1 மில்லியன் மெற்றிக் தொன் ஆகும், அதேவேளையில் 2.4 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி நாட்டில் நுகர்வுக்கு வருடாந்தம் தேவைப்படுகிறது.நாட்டில் போதியளவு அரிசி இருந்த போதிலும், அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குறைந்த விலையில் அரிசியை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு இடமளிக்கும் நோக்கில் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கிரிக்கெட் நிர்வாகத்தை எம்மிடம் தந்தால் சரியாக வழிநடத்துவோம்

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் சரியான திட்டத்தை கடைபிடிக்காவிட்டால், தேசிய அணியின் வீழ்ச்சியை தடுக்க முடியாது. அதுதான் இப்போது நடந்துள்ளது. மற்றையது அணியின் ஒழுக்கம் மிகவும் முக்கியமானது என 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை தேசிய கிரிக்கட் அணியின் முன்னாள் உப தலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்தார்.

தற்போதைய தேசிய அணியில் பல திறமையான வீரர்கள் இருந்தாலும், அவர்களுக்கு சரியான வழிகாட்டுதலை வழங்கக்கூடிய கிரிக்கெட் நிர்வாகம் இல்லை என்றும் அவர் கூறினார்.

தற்போதைய கிரிக்கெட் சபையின் மோசமான நிர்வாகத்தினால் கிரிக்கட் அணியின் கதி என்னவாகும் என அவரிடம் ஊடகங்கள் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரவிந்த டி சில்வா கூறியதாவது:

நாங்கள் விளையாடும் போது கிரிக்கெட் சபை சரியாக பராமரிக்கப்பட்டது. அவர்கள் அணி ஒழுக்கத்தை, முதல் விடயமாக கொண்டு வந்தனர். வீரர்களையும் அடிக்கடி சோதனை செய்தார். இதனால் வீரர்கள் சரியாக விளையாடினர். தவறு செய்யவில்லை. இன்று நிலைமை வேறு. நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்றால், வீரர்கள் தவறாக வழிநடத்தப்படலாம். அணியில் சிறந்த மற்றும் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். இவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் தரக்கூடிய நிர்வாகம் இல்லை.

இப்போதும் நிர்வாகம் சரியான திட்டத்தை கடைபிடிக்காவிட்டால், இலங்கை தேசிய அணி மேலும் வீழ்ச்சியடையலாம். விதிகளை அமைக்கவும். நிர்வாகத்தை மாற்றி, நாட்டின் மீது அக்கறையுள்ள, கிரிக்கெட்டை நேசிக்கும் நபர்களை நியமிக்க வேண்டும். நாங்கள் விளையாடும் போது கிரிக்கெட் நிர்வாகம் நன்றாக இருந்தது.



இப்படியே போனால் நன்றாக கிரிக்கெட் விளையாடும் வீரர்களின் எதிர்காலம் அழிந்து போகலாம். நான், அர்ஜூன மற்றும் குழுவினரிம் கிரிக்கெட் நிர்வாகத்தை ஒப்படைத்தால், நாட்டுக்கு சிறந்த சேவையை செய்வோம் என்றார்.

(அ)




## சிறிலங்கா கிரிக்கெட்டுக்கு அர்ஜுன தலைமையில் குழு

இலங்கை கிரிக்கெட்டுக்கு இடைக்கால நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நேற்று வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூண ரணதுங்க இந்த இடைகால நிர்வாகக் குழுவிற்கு தலைமை தாங்குகின்றார்.

அத்துடன், ஓய்வூ பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம், ஓய்வூ பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரொஹினி மாரசிங்க, ஓய்வூ பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஐராங்கணி பெரேரா, எச்.கே.உபாலி தர்மதாஸ, சட்டத்தரணி ரகித்த நிமல ராஜபக்ஸ மற்றும் எம்.எச்.ஜமால்டீன் ஆகியோர் இந்த குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக படு தோல்விகளை சந்தித்து வருகின்ற நிலையில், சிறிலங்கா கிரிக்கெட்டின் நிர்வாக குழு பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெற்று வந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே, இந்த இடைகால நிர்வாக குழு நியமிக்கப்பட்டுள்ளது.



## ஏழாவது முறையாக பரிஸ் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை வென்றார் ஜோகோவிச்!

பாரிஸ் மாஸ்டர்ஸ் தொடரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இறுதி போட்டியில் கிரிகோர் டிமிட்ரோவை வீழ்த்தி ஏழாவது முறையாக பரிஸ் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை நோவக் ஜோகோவிச் வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் அவர் 40ஆவது மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றுள்ள அவர், ஏற்கனவே சின்சினாட்டியில் மாஸ்டர்ஸ் கிண்ணம் மற்றும் மூன்று கிராண்ட்ஸ்லாம்கள் என இந்த ஆண்டில் ஆறு பட்டத்தை வென்றுள்ளார்.

இந்த ஆண்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் 36 வயதான நோவக் ஜோகோவிச், இதுவரை 33 போட்டிகளில் வெற்றி பெற்று ஒரு முறை மட்டுமே தோல்வியடைந்துள்ளார்.

உலகத் தரவரிசையில் 17வது இடத்தில் உள்ள பல்கேரிய வீரர் கிரிகோர் டிமிட்ரோவை இறுதி போட்டியில் எதிர்கொண்டது நோவக் ஜோகோவிச்சிற்கு பாரிய சவாலாக அமையவில்லை.

## பிறந்த நாளில் சச்சினின் சாதனையை சமப்படுத்தினார் விராட் கோலி

தனது பிறந்தநாளான நேற்று முன் தினம் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 49ஆவது சதத்தை பதிவுசெய்த விராட் கோலி, சச்சின் டெண்டுல்கரின் சாதனையை சமன் செய்துள்ளார்.

நடப்பு உலகக்கிண்ண தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக விராட் கோலி ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

இதன்மூலம் அவர் 289 ஒருநாள் போட்டிகளில் 49 சதங்களை அடித்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் இந்த போட்டி இடம்பெறுகின்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணி 50 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 326 ஓட்டங்களை பெற்றிருந்தது.

விராட் கோலி சதம் அடித்திருந்தார். ஷ்ரேயாஸ் ஐயர் 77 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 40 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

சச்சின் டெண்டுல்கர் 463 போட்டிகளில் 49 சதங்களை அடித்துள்ளார். எனினும், விராட் கோலி 289 போட்டிகளில் சச்சினின் சாதனையை சமன் செய்துள்ளார்.

சச்சினுடன் ஒப்பிடுகையில் விராட் கோலி 174 குறைவான போட்டிகளில் விளையாடியுள்ளார். (அ)




# முதல் சுற்றுடன் வெளியேறும் நடப்பு சம்பியன்

நடப்பு உலக சம்பியனான இங்கிலாந்து இந்தமுறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்ததன் காரணமாகவே இங்கிலாந்து அணிக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் அஹமதாபாத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் மோதின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 48.3 ஓவர்களில் 286 ஓட்டங்களை பெற்றது.

மார்னஸ் லபுஷேன் 71 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.

கிரிஸ் வோக்ஸ் 4 விக்கெட் டுக்களை கைப்பற்றினார்.

287 ஓட்டங்களை நோக்கி பதிலளித்தாடிய இங்கிலாந்து அணியால் 48.1 ஓவரில் 253 ஓட் டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

பென் ஸ்டோக்ஸ் 64 ஓட்டங்களையும் டேவிட் மிலன் 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

அடம் ஷம்பா 3 விக்கெட்டுகளையும் மிட்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹஷல்வூட், பெட் கம்மின்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.



இது இந்தமுறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அடைந்த 6ஆவது தோல்வியாகும்.

இதனால் இந்த சுற்றுடன் நடப்பு உலக சம்பியனான இங்கிலாந்து வெளியேறுவதுடன் அவர்களுக்கு முதல் சுற்றில் இன்னும் 2 போட்டிகள் எஞ்சியுள்ளதுடன் அவை எதிர்வரும் 8 ஆம் திகதி நெதர்லாந்துக்கு எதிராகவும் 11 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிராகவும் நடைபெறவுள்ளன.

# காஸாவில் மனிதாபிமான போர் இடைநிறுத்தமா? அதற்கும் போர் நிறுத்தத்திற்கும் என்ன வேறுபாடு?





காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடங்கி 4 வாரங்களை கடந்துவிட்ட நிலையில் அங்குள்ள மக்களின் நிலை நாளுக்கு நாள் மிகவும் மோசமாகி வருகிறது. இஸ்ரேலின் தாக்குதல் நீடிக்கும் ஒவ்வொரு நாளும் அரபு நாடுகளில் மக்களிடையே கொந்தளிப்பு அதிகரித்து வருகிறது.

அந்த பிராந்தியத்தில் நிலைமை மேலும் மோசமாகிவிடாமல் தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளது. அதற்காக, அமெரிக்க வெளியுறவு செயலர் ஆண்டனி பிளிங்கன் மத்திய கிழக்கில் முகாமிட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமையன்று இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கும் மற்றும் சனிக்கிழமையன்று ஜோர்டான் தலைநகர் அம்மானுக்கு அவர் சென்று சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

அதன் தொடர்ச்சியாக ஆண்டனி பிளிங்கன் திடீரென ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவுக்கு சென்றார். அவரது மத்திய கிழக்கு பயணத்தின் தொடக்கத்தில் இதுகுறித்த அறிவிப்பு ஏதும் இல்லை.

**மஹ்மூத் அப்பாஸ் - பிளிங்கன் பேசியது என்ன?**

அங்குள்ள பாலஸ்தீன அதிகார சபையின் தலைமையகத்தில் பாலத்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸை அவர் சந்தித்தார். அப்போது, மேற்குக் கரையில் அமைதியை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் குறித்து இருவரும் விவாதித்ததாக அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

“இஸ்ரேல் - ஹமாஸ் பிரச்னை குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், பாலத்தீன தலைவர் மஹ்மூத் அப்பாஸுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

காஸாவில் உயிர் காக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் அத்தியாவசிய சேவைகளை மீண்டும் தொடங்குவதற்கும் அமெரிக்காவின் ஆதரவை பிளிங்கன் மீண்டும் உறுதிப்படுத்தினார்” என்று அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார்.

பாலத்தீனர்களை “வலுக்கட்டாயமாக இடம்மாற்றம் செய்யக்கூடாது” என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார் என்று மேத்யூ மில்லர் கூறினார்.

பிளிங்கனும் அப்பாஸும் மேற்குக் கரையில் “அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான” முயற்சிகள் குறித்து விவாதித்தனர். இதில் “பாலத்தீனர்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் இத்தாக்குதலுக்கு யார் பொறுப்போ, அவர்களைப் பொறுப்பேற்கச் செய்வது” ஆகியவை அடங்கும் என்று அவர் மேலும் கூறினார்.



“பாலத்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் கண்ணியம் மற்றும் பாதுகாப்பு குறித்து சமமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது” என்று பிளிங்கன் மீண்டும் வலியுறுத்தியதாக மில்லர் கூறினார்.

“பாலத்தீன அரசை உருவாக்குவதற்காக பாலத்தீனர்கள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றத் தேவையான” பணிகளை நிறைவேற்றுவதில் அமெரிக்காவின் உறுதிப்பாட்டையும் பிளிங்கன் வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

**மனிதாபிமான போர் இடைநிறுத்தம் - அமெரிக்கா சூசகம்**

மனிதாபிமான அடிப்படையில் போர் இடைநிறுத்தம் செய்வது தொடர்பான முயற்சிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சூசகமாக தெரிவித்துளளார்.

இஸ்ரேல்- ஹமாஸ் போரில் மனிதாபிமான அடிப்படையில் தாக்குதல் நிறுத்தம் செய்வதை நோக்கி சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையில் அவர் என்ன சொன்னார்?.

சனிக்கிழமை, பைடனிடம் செய்தியாளர்கள் போர் நிறுத்தத்தை அமல்படுத்துவதில் ஏதேனும் முன்னேற்றம் உள்ளதா என்று கேட்டனர்.

டெலாவேரில் உள்ள ஒரு தேவாலயத்தை விட்டு வெளியேறிய போது அமெரிக்க அதிபர் வெறுமனே “ஆம்” என்று கூறி கட்டைவிரலை உயர்த்திக் காட்டிவிட்டுச் சென்றார்.

**போர் நிறுத்தம் - மனிதாபிமான இடைநிறுத்தம் என்ன வேறுபாடு?**

காஸாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மோதலில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று பல நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தியுள்ளன.

ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட மற்ற சக்திகள் இந்த யோசனையை ஆதரிக்கவில்லை. இது அமெரிக்கா மற்றும் பல மேற்கத்திய அரசாங்கங்களால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ள ஹமாஸுக்கு பயனளிக்கும் என்று கூறுகின்றன.

நாங்கள் கூறிவருவதைப் போல் அமெரிக்கா அதற்கு பதிலாக ஒரு மனிதாபிமான ரீதியிலான இடைநிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது.

ஒரு முறையான போர் நிறுத்தத்துடன் ஒப்பிடும்போது, மனிதாபிமான இடைநிறுத்தங்கள் குறுகிய காலத்திற்கு நீடிக்கும். சில நேரங்களில் சில மணி நேரங்கள் மட்டுமே நீடிக்கும். மேலும் பொதுவாக வரையறுக்கப்பட்ட காலம் மற்றும் குறிப்பிட்ட இடத்தை உள்ளடக்கியதாகவே இருக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, நீண்டகால அரசியல் தீர்வுகளை அடைவதற்கு மாறாக, மனிதாபிமான ஆதரவை வழங்கும் நோக்கத்துடன் அவை பொதுவாக செயல்படுத்தப்படுகின்றன.

இதற்கிடையில், போர்நிறுத்தங்கள் நீண்ட கால நோக்கம் கொண்டவை. மேலும் பெரும்பாலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் உட்பட இரு தரப்பினரும் பேச்சு வார்த்தையில் ஈடுபட அனுமதிப்பதை போர் நிறுத்தம் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன என்று ஐ.நா கூறுகிறது.

**காஸா மக்கள் தெற்கே இடம்பெயர அவகாசம் - இஸ்ரேல்**

வடக்கு காசாவில் உள்ள மக்கள் தெற்கு நோக்கி இடம்பெயர நான்கு மணி நேர அவகாசத்தை அளிக்கப் போவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் இடம்பெயர்வதற்கான பாதை, காஸா பகுதியில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையான சலா அல்-தின் சாலை என்றும், - உள்ளூர் நேரப்படி காலை 10:00 மணி முதல் மதியம் 02:00 மணி வரை (0800-12:00 ஜிஎம்டி) பொதுமக்கள் பயணிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமையும் இதேபோன்ற திட்டத்தைச் செயல்படுத்தும் நிலை இருந்தது. ஆனால் துப்பாக்கி ஏந்திய ஹமாஸ் ஆயுதக்குழுவினர் அந்தச் சாலையில் பணியாற்றும் இஸ்ரேலிய ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியது. பொதுமக்களை “மனிதக் கேடயங்களாகப்” பயன்படுத்த ஹமாஸ் அமைப்பு முயற்சிப்பதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

மீண்டும் நினைவூட்டும் வகையில், வடக்கு காஸாவை பொதுமக்களை வெளியேற்றும் பகுதியாக இஸ்ரேல் அறிவித்தது. அங்கு வசித்து வரும் பொதுமக்கள் தென்பகுதியை நோக்கி பாதுகாப்பாகப் பயணிக்குமாறும் அழைப்பு விடுத்தது. இருப்பினும் தெற்கு பகுதியிலும் அப்போது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தற்போதைய நிலையில், சுமார் 3,50,000 முதல் 4,00,000 பேர் தற்போது வடக்கு பகுதியில் தங்கியுள்ளனர் என்று அமெரிக்க தூதர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சீனாவிலிருந்து மீன் இறக்குமதி செய்யும் யோசனையும் அதிலுள்ள பேராபத்தும்!



யதீந்திரா

யாழ் வடமாராட்சி மீனவர்கள் சம்மேளணம் அண்மையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது. அதாவது, சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் யோசனையை கைவிடுங்கள். அதனால் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அத்துடன் காலப்போக்கில் எங்களுடைய உள்ளூர் மீன்பிடியே இல்லாமல் போய்விடும்.

சீனா அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடித் துறையின் மீது அதிக ஈடுபாட்டை காண்பித்து வருகின்றது. பொருளாதார நெருக்கடியால் மீனவர்கள் தொழில்களை இழந்திருந்த சந்தர்ப்பங்களில், மீனவர்களுக்கு உலர் உணவுகளை வழங்கியது. அத்துடன், இலவசமாக டிசல் வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. சீனா திடீரென்று ஏன் வடக்கு கிழக்கு மீனவர்கள் மீது அக்கறை காண்பிக்கின்றது? இந்தக் கேள்விக்கு எவரிடமும் பதில் இருக்கவில்லை. ஆனால் இப்போது அந்த பதில் கிடைத்திருக்கின்றது. நீண்டகால நோக்கில் வடக்கு கிழக்கின் மீன்பிடித்து துறைக்குள் உள்நுழையும் நோக்கத்துடன்தான், சீனா மீனவர்கள் பக்கம் திரும்பியிருக்கின்றது.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவில் இடம்பெற்ற ஒரு பட்டி- ஒரு வலயம் மகாநாட்டில் பங்கு கொண்டிருந்தார். இதன் போது, ஜனாதிபதியுடன் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சென்றிருந்தார். இதன் போது, சீனாவின் ஒரு பட்டி - ஒரு வலயம் திட்டத்தின் கீழ், 1500 மில்லியன் ரூபா முதலீட்டை, வடக்கு கிழக்கு மீன்பிடித்து துறையில் செய்யவுள்ளதாக சீனா வாக்குறுதியளித்திருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் ஆலோசனையும் வெளிப்பட்டிருக்கின்றது. வடமாராட்சி மீனவர்கள் சம்மேளணத்தின் அறிக்கையின்படி, இந்த விடயத்தில் கடற்தொழில் அமைச்சர் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வடக்கில் கடலட்டை பண்ணைகள் பெருகிய போது, அதனால் உள்ளூர் மீன்பிடித் துறை நீண்டகாலத்தில் பாதிக்கப்படும் என அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டன. மீனவர்கள் மத்தியிலிருந்தும் கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறான எதிர்ப்புக்களையும் மீறியே கடலட்டைப் பண்ணைகள் பெருகின. கடல் உயிரியல் மற்றும் சுற்றுச்சூழலியல் நிபுனர்களின் கருத்தின்படி, கடலட்டை பண்ணைகளின் பெருக்கம் நீண்டகால அடிப்படையில் உள்ளூர் மீன்பிடியை வலுவிழக்கச் செய்யும் - காலப்போக்கில் உள்ளூர் மீன்பிடியே இல்லாமலும் போகலாம் என்று கூறகின்றனர். இவ்வாறான கடலட்டை பண்ணைகள் அதில் முதலீடு செய்யும் சிலருக்கு மட்டுமே நன்மையளிக்கும்.

தற்போது அவ்வாறான எதிர்வு கூறல்கள் உண்மையாகி வருகின்றனவா என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில் சீனாவிலிருந்து உள்ளூர் நுகர்விற்காக, மீன்களை இறக்கு மதிசெய்யும் யோசனை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இலங்கை ஒரு வளமுள்ள கடல்பகுதியை கொண்டிருக்கும் நாடு. இவ்வாறானதொரு நாட்டில் உள்ளூர் மீன் தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய முற்படுவதானது அடிப்படையிலேயே தவறான பொருளாதார அணுகுமுறைகளின் விளைவாகும்.

மீன்களை ஏற்றுமதி செய்வதில் சீனா முன்னணி வகிக்கும் நாடு ஆனால் சட்ட வரம்புகளை மீறி, மீன்களை பிடிப்பதில் முன்னணி வகிக்கும் நாடும் சீனாதான். சர்வதேச மீன்பிடி நியமங்களை வரையறைக்கும் ஐ.யு.யு வின் (**Illegal unregulated and Unreported** (ஐருரு) கணிப்பின்படி, மீன்பிடியில் சீனா ஒரு மோசமான நாடாகும். அமெரிக்க காங்கிரஸ் சேவைகள் அறிக்கையின்படி, மீன்பிடி கப்பல்களை கையாளுவதில் சீனா ஒரு சட்டவிரோத நடாகும். அதே வேளை உலகிலேயே இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக மீன்பிடிக் கப்பல்களை பயன்படுத்தும் ஒரேயொரு நாடும் சீனாதான். இந்த அடிப்படையில் நோக்கும் போது, சீனா அதன் பொருளாதார அணுகுமுறையில் சர்வதேச சட்டவிதிகளை பெருமளவில் பொருட்படுத்துவதில்லை என்பது தெளிவாகின்றது. உலகில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான ஆயுத அமைப்பொன்றை வைத்திருக்கும் ஒரேயொரு நாடும் சீனா மட்டும்தான். இந்தப் பின்புலத்தில்தான் சீனாவின் கப்பல்கள் இலங்கையில் நங்கூரமிடப்படும் போது, பாதுகாப்பு கரிசனைகள் அதிகரிக்கின்றன. இந்திய ஊடகங்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துகின்றன. சீனாவின் மீன்பிடி நடவடிக்கைள் அனைத்துமே, குறித்த மீன்பிடி இராணுவ கட்டமைப்பினால்தான் தீர்மானிக்கப்படுகின்றது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களின் விலை, ஒப்பீட்டடிப்படையில் குறைவானது. இதன் காரணமாகவே பல ஆபிரிக்க நாடுகள் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்கின்றன ஆனால் தற்போது காலப்போக்கில் முற்றிலுமாக சீனாவில் தங்கியிருக்கும் நிலை ஏற்படலாம் என்னும் அச்சத்தினால் ஆபிரிக்க நாடுகள் சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன.

இதற்கு கிழக்காபிரிக்க நாடான கென்யா ஒரு சிறந்த உதாரணமாகும். உள்ளூர் நுகர்வுக்காக சீனாவிலிருந்து, அதிகளவில் மீன்களை இறக்குமதி செய்யும் நாடாக கென்யாக இருந்தது. ஆனால் 2021இல், உள்ளூர் மீன்பிடித் துறையின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு சீனாவிலிருந்து, மீன்கள் இறக்குமதிசெய்வதற்கு தடைவிதித்தது. 2018இல், இந்த தீர்மானத்தை எடுத்த போது, ஒரு புகையிர பாதை நிர்மானத் திட்டத்திற்கான நிதியை நிறுத்திவிடுவதாக சீனா எச்சரித்தது. கடனுதவின் இறுதிப் பகுதியை விடுவிக்கும் உடன்பாட்டிலிருந்தும் வெளியேறியது. இது ஒரு சிறந்த உதாரணம். சீனாவுடனான, ஒப்பந்தங்களிலிருந்து, ஒரு நாடு வெளியேற முற்படும் போது, சீனா எவ்வாறு கடனுதவிகளை அச்சுறுத்தும் ஆயுதமாக பயன்படுத்துகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

இதற்கப்பால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களின் தரமும் சந்தேகத்துக்கு உரியதாகவும், கென்ய அரசாங்கத்தினால் இனம்காணப்பட்டது. மீன்கள் ஏற்றுமதிக்காக பதனிடப்படும் போது, பின்பற்ற வேண்டிய உலக சுகாதார நிறுவனத்தின் தராதரங்கள் சரியாக பின்பற்றப்படவில்லையென்று, கிழக்காபிரிக்க ஆய்வுகூட தெரிவுக்குழு இனம்கண்டது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களின் பாகங்களை ஆய்வு செய்த, நைரோபி பல்கலைகழக்கத்தின், பொது சுகாதார, மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் தலைவர், பேராசிரியர் ஜேம்ஸ் மபரியா இவ்வாறு கூறுகின்றார், சீன மீன்களில் உலோகத்தின் கூறுகள் இருக்கின்றன, இவ்வாறான மீன்களை தொடர்சியாக உட்கொள்ளும் போது, அது மனித உடலை பாரதூரமாக பாதிக்கும் என்கிறார் மபரியா.



இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் உள்ளூர் மீன் நுகர்விற்கு இறக்குமதி செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை. ஆனாலும் சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யும் யோசனை முன்வைக்கப்படுகின்றதென்றால், அந்தளவிற்கு சீனா அதன் பிடியை இலங்கையில் இறுக்கிக் கொண்டு செல்கின்றது என்பதே பொருள். சீனாவின் சந்தைக்கான கடலட்டைகளை உள்ளூரில் ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபடும் சீனா, மறுபுறமாக அதன் விளைவாக உள்ளூர் மீன்பிடி பாதிக்கப்படும் போது, உள்ளூர் நுகர்விற்காக சீனாவின் மீன்களை இறக்குமதி செய்ய தூண்டுகின்றது.





வடக்கு கிழக்கின் மீன் நுகர்வு தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் யோசனையானது அடிப்படையிலேயே தவறானது. இது நிச்சயம் உள்ளூர் மீன்பிடியை முற்றிலுமாக இல்லாமலாக்கும். அடுத்து, மீன்பிடித் துறைக்குள் சீனாவின் ஊடுருவல் அதிகரிக்கும் போது, காலப்போக்கில் உள்ளூர் தேவைகளுக்காக முற்றிலும் சீனாவில் தங்கியிருக்கும் நிலைமையும் உருவாகும். தமிழ் தேசியவாத அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் இந்த விடயத்தில், தீவிர கவனம் செலுத்த வேண்டும். மீனவர்களின் அச்சம் மிகவும் நியாயமானது. வடக்கு கிழக்கின் உள்ளூர் மீன் தேவைகளுக்காக சீனாவிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படும் திட்டத்தால், வடக்கு கிழக்கின் மீன்பிடியே நீண்டகால அடிப்படையில் இல்லாமல் போகும். ●

# கிழக்கில் 51 சிறுவர் இல்லங்களில் ஆயிரத்து 204 பிள்ளைகள் உள்ளனர்

## மாகாண ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ் தகவல்



திருமலை, நவ. 07

கிழக்கு மாகாணத்திலுள்ள **51** சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் **1204** பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுதவிர அரச பாதுகாப்பு **4** இல்லங்களில் **45** பிள்ளைகளும் பராமரிக்கப்படுவதாக கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் (திருமதி) றிஸ்வானி றிபாஸ் தெரிவித்தார்.

உலக சிறுவர் தினத்தையொட்டி "எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப் பொருளில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட சிறுவர் தின நிகழ்வு நேற்று முன் தினம் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற பிள்ளைகளில் மிகத் திறமையானவர்களும் இருக்கின்றனர். இம்முறை வெளியான புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனர். அதில் புலமைப் பரிசில் பரீட்சையில் ஒருவரும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 8 ஏ சித்திபெற்ற 2 பேரும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தது பல்கலைக்கழகத்திற்கு 22 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வியில் மட்டுமல்ல விளையாட்டு, கலை, கலாசார மற்றும் மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறுபட்ட திறன்கொண்டவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களை இன்றைய நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கவுள்ளோம்-என்றார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முதளிதரன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், சி.டி நிறுவனத்தின் பணிப்பாளர், சி.டி.எப்.

நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் லயன்ஸ் கழகத்தின் பிராந்திய தவிசாளர் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(அ)



# சிறுவர் கழகங்களை வலுப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளுக்கு விளையாட்டுப்பொருட்கள்

அம்பாறை, நவ. 07

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சமுர்த்தி திணைக்களம் என்பன நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை சகல வாய்ப்புக்களையும் சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறுவர் குழுக்கள் அல்லது கழகங்களை தாபிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள சிறுவர் குழுக்கள், கழகங்களை மீளமைத்தல் மற்றும் மாணவர்களுக்கான விஷேட விழிப்புணர்வு செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மகிழ்ச்சிகரமான சிறுவர் கழங்களை உருவாக்கி அவற்றின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் வகையில் சிறுவர் கழக உறுப்பினர்கள் உள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. பி. யஷோதாவின் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்டது.

விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் பிரதான நிகழ்வு உதவி பிரதேச செயளாலர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இடம்பெற்றது.

மேலும், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா ஆகியோரும் விளையாட்டு பொருட்களை பாடசாலை பொறுப்பாசிரியர்களிடம் வழங்கினர்.

(அ)

